அடிக்கிற வர்த்தமானி எல்லாம் ரிவர்ஸ் ஆகுது... சொல்லுற அறிவிப்பெல்லாம் வாபஸ் வாங்குறார்... கோட்டா ஐயாவை விஞ்சிடுவார் போல ரணில் ஐயா...!




Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 116 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமை (01.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 06, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


**உஷ்**



மாவட்ட சபைகளை உருவாக்குவதாக ரணில் மேற்கொண்ட அறிவிப்புக்கு முதலில் எதிர்ப்பை வெளியிட்டவர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.தான்.

“ரணிலின் இரட்டைப்போக்கு அறிவிப்புக்கு நீங்கள்தான் காரணமா?” என்று நாடாளுமன்ற உணவகத்தில் எதிர்ப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகவே கேட்டாராம் மனோ.

எப்படியோ இந்த விடயம் அரச மேல்மட்டத்தில் பேசப்பட்டதால் நேற்று அந்தர்பல்ட்டி அடித்தார் ரணில்.

# தமிழர் எதிர்ப்பினால் பின்வாங்கிய ரணில்!

## மாகாண சபை முறைமைக்குப் பதிலாக மாவட்ட சபை வராதாம்

•நமது விசேட செய்தியாளர்

மாகாண சபை முறைமைக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மீண்டும் நியமிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் தெரிவித்ததாக வெளிவந்த செய்திகளை ஜனாதிபதி அலுவலகம் நிராகரித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று இதனை அறிவித்துள்ளது.


நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நியமித்து மக்களுக்கு நல்ல பல சேவைகளை செய்யலாமென கூறினார்.

அப்போது குறுக்கிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்க தாம் தயாரென தெரிவித்தார்.

இதனையடுத்து இப்போது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஜனாதிபதி செயலகம், மாகாண சபை முறைமைக்கு மாற்றீடாக மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை அமுலாகுமென ஜனாதிபதி ரணில் கூறவில்லையென தெரிவித்துள்ளது.

## எயிட்ஸ் பாதிப்பில் ஆண்கள்

சுகாதாரத்துறை தகவல்




•நா.தினுஷா

நடப்பாண்டின் செப்டெம்பர் வரையான ஒன்பது மாத காலப்பகுதியில் 429 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களின் 35 சதவீதமானவர்கள் இளைஞர்களாக காணப்படுகின்றனர். ஆண்களுக்கு இடையிலான பாலியல் தொடர்புகள் அதிகரித்துள்ளதால், இந்த வருடம் அதிக எண்ணிக்கையிலான ஆண்களே எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சமூக மருத்துவ நிபுணரும் தேசிய பாலியல் தொற்றுநோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் வைத்திய நிபுணர் ஜானக்க வேரகொட தெரிவித்தார். 02 பக்கம்

## மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு எதிராக டக்ளஸ் போர்க்கொடி!

### தட்டிக்கழிக்கப்பட்டதை தொட்டுப்பார்க்கக் கூட தமிழ் மக்கள் தயாரில்லை எனவும் தெரிவிப்பு



•நமது நிருபர்

நாட்டில் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்புக்கு அரசாங்கத்தின் மூத்த அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், அந்த முயற்சிக்கு தமிழர்கள் தயாரில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார். 02 பக்கம்

## ஜனாதிபதி ரணிலின் அறிவிப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

### மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குறித்து கூட்டமைப்பு சபையில் அறிவிப்பு



•ம.சுசிகலா

மக்கள் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசியமை அதிர்ச்சியளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் நேற்று தெரிவித்தார். 02 பக்கம்

## கணினி நிபுணர்கள் 10,000 பேர் புலம்பெயர்வு



•த.யுவராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கணினி பொறியியலாளர்கள் 10 ஆயிரம் பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக இலங்கை... 02 பக்கம்

## இரட்டைக் குடியுரிமை விண்ணப்பங்களுக்கு கட்டணம் அதிகரிப்பு




•நா.தினுஷா

இரட்டைக்குடியுரிமை கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான கட்டணம் இரண்டாயிரம் டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய தெரிவித்தார்.

02 பக்கம்

## மகன், மகள்மாரை துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது

02 பக்கம்

## பல்கலைக்கழகங்களிலேயே வர்க்க வேறுபாடு உருவாகிறது

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தெரிவிப்பு



•நா.தினுஷா

பல்கலைக்கழக மாணவர்கள் ஜனநாயகத்துக்காகவும், வர்க்க வேறுபாட்டுக்கு எதிராகவும் வீதிக்கு இறங்கி சுதந்திரத்தை கோருகிறார்கள். ஆனால், பல்கலைக்கழகங்களுக்குள் இவர்கள் அடிப்படைவாதிகளாகவே செயற்படுகிறார்கள். 02 பக்கம்

## அரச ஊழியர்களின் ஆடை தொடர்பில் புதிய சுற்றறிக்கை

2019 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் அரசதுறையின் ஊழியர் தர அதிகாரிகளின் உத்தியோகபூர்வ உடை தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

புதிய சுற்றறிக்கையை வெளியிட்ட அமைச்சு, இதற்கு முன்னர் ஜூன் 2019 மற்றும் செப்டெம்பர் 2022இல் வெளியிடப்பட்ட இரண்டு சுற்றறிக்கைகள் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## மாணவர்களை இலக்குவைத்து போதை விற்பனை;

### இனிப்புகளுடன் கலந்து கொடுத்த இருவர் கைது

•நா.தினுஷா

பாணந்துறை பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து விற்பனை செய்யப்படும் போதைப்பொருள் உள்ளடக்கப்பட்டுள்ளதென்று சந்தேகிக்கப்படும் ஒருதொகை இனிப்புகள் மற்றும்... 02 பக்கம்

### இலகுவாகக் கவர புதிய வழிமுறைகள்

பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டுமென பொலிஸார் கோரிக்கை



02 பக்கம்

## இந்தியாவில் பரவும் மலேரியா



யாத்திரிகர்களை எச்சரிக்கிறார் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

•யாழ்.செய்தியாளர்

இந்தியாவுக்கு தல யாத்திரை செல்ல இருப்பவர்கள் சுகாதார முற்பாதுகாப்பு ஆலோசனைகளைப் பின்பற்றி மலேரியா தொற்றிலிருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க வேண்டுமென யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## மலையகத்துக்கு 36,158 மலசலகூடங்கள் தேவை

### கறுப்பு ஆடையில் சபைக்கு வந்த இராதா எம்.பி. அரசின் மீது கடும் விமர்சனம்

•கே.சுபானி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு ஆடையில் சபைக்கு நேற்று வருகை தந்திருந்த... 02 பக்கம்



## மைத்ரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அமைச்சர் அமரவீர அறிவிப்பு

•கே.சுபானி

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## அரச ஊழியர்களின் ஆடை...

இரண்டு சுற்றறிக்கைகளையும் மீளப்பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசு ஊழியர்கள் சாதாரண மற்றும் பொருத்தமான உடையில் பணிக்கு வருவதற்கு சுற்றறிக்கைகள் அனுமதித்துள்ளன.

அதனடிப்படையில் அரச ஊழியர்கள் தமது கடமை நேரத்தில் பொருத்தமான அலுவலக ஆடைகளை அணியுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், ஆடைகளுக்காக அரச கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்பவர்கள் உரிய உடைகளை அணிவதை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கணினி நிபுணர்கள்...

கணினி நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் தமித் ஹெட்டிஹேவா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாடு தகவல் தொழில்நுட்பத் துறையில் வீழ்ச்சியடையும் நிலை உருவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கணினி துறையைச் சார்ந்த பொறியியலாளர்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளமையும் இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கணினி தொழிற்றுறைக்கு கொவிட் தொற்றுப் பரவலுக்கு முன்பே சுமார் 20 ஆயிரம் தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், சுமார் ஒன்பதாயிரம் பேர் வரையிலேயே இந்தத் துறையில் கைகோர்த்ததாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு தொழில்நுட்ப வல்லுநர்கள் இடம்பெயர்கின்றமையானது நாட்டின் தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் துறையை மேலும் பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மைத்ரிக்கு எதிராக...

இதுகுறித்து அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னணியின் செயற்குழுவை கூட்டினால் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். கட்சியின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் தமக்கே கட்சியின் செயற்குழுவை கூட்டுவதற்கான அதிகாரம் உள்ளது. அதைவிடுத்து கட்சித் தலைவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அதைவிடுத்து கட்சியின் செயற்குழுவை கூட்டுவாராயின், அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து மஹிந்த அமரவீரவை நீக்குவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார். எனினும், இது குறித்து தமக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைக்கவில்லையெனினும் அவ்வாறு பதவி நீக்கப்படுவது கூட்டணியின் யாப்புக்கு புறம்பானது என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

இந்நிலையிலேயே மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

## இலகுவாகக் கவர...

நா. தினுஷா

போதை டொபி, போதை சொக்கலேட், போதை லொலிபொப் மற்றும் டெப்லட் போன்ற பல்வேறு முறைகளில் பாடசாலைகளுக்குள் போதைப்பொருட்கள் கொண்டுசெல்லப்படலாம். அதனால், பெற்றோர் தொடர்ச்சியாக இதுதொடர்பில், அவற்றை பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும் - என்று பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான படையணியின் பணிப்பாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்கு செல்லும் தமது குழந்தைகள் தொடர்பில் பெற்றோர் தொடர்ச்சியாக அவதானத்துடன் செயற்படவேண்டியது மிகவும் அவசியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமூகத்திலிருக்கும் பல்வேறுபட்ட சவால்களையும் எங்களால் ஒரே முறையில் நிறுத்திவிட முடியாது. டொபி, சொக்லைட், டெப்லட் போன்ற பல்வேறு முறைகளில் இன்று பாடசாலைகளுக்குள் போதைப்பொருட்கள் நுழைந்துள்ளன. பெற்றோர் என்ற அடிப்படையில் நீங்கள் அனைவரும் இதுதொடர்பில் உங்களின் குழந்தைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்களுக்கு தெரியாமலேயே அவர்களைப் பற்றி தேடிப்பார்க்க வேண்டும்.

குழந்தைகள் பாடசாலைக்கு மற்றும் தனியார் வகுப்புகளுக்குச் சென்று அங்கு அவர்கள் எவ்வாறான நண்பர்களுடன் இணைந்து செயற்படுகிறார்கள், அறநெறி பாடசாலைகளில் இணைந்து செயற்படும் நண்பர்கள், பாடசாலை சென்று வரும்போது அவர்கள் என்ன செய்கிறார்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

## பல்கலைக்கழகங்களிலேயே...

பல்கலைக்கழகங்களுக்குள்ளேயே வர்க்க வேறுபாடும் உருவாக்கப்படுவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (30) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் தொடர்ந்து கூறுகையில்,

எமது பல்கலைக்கழக கட்டமைப்புக்குள் அரசியல் ஊடுருவி தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. நாட்டிலுள்ள திறமையானவர்களே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படுகிறார்கள். ஆனால், பல்கலைக் கழகங்களுக்குள் அரசியல் கட்சிகள் நுழைந்து அங்கு மாணவர் சங்கங்களை உருவாக்கி அங்கு தனியான கலசாரத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்துக்காகவும், வர்க்க வேறுபாட்டுக்கு எதிராகவும் நடுவீதிக்கு இறங்கி சுதந்திரத்தைகட கோருகிறார்கள். ஆனால், பல்கலைக்கழகங்களுக்குள் இவர்கள் அடிப்படைவாதிகளாகவே செயற்படுகிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். வர்க்க வேறுபாடும் பல்கலைக்கழகங்களுக்குள்ளேயே உருவாக்கப்படுகின்றன. பகிடிவதை, பாலியல் துன்புறுத்தல்கள் என்பனவும் பல்கலைக்கழகங்களிலேயே அதிகளவில் இடம்பெறுகின்றன. அதேபோன்று, பல்வேறு அச்சுறுத்தல்களும் இடம்பெறுகின்றன. நாங்கள் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க செயற்பட்டு வருகிறோம் - என்றார்.

## இந்தியாவில் பரவும்...

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை 2016ஆம் ஆண்டுமுதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 2012ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் மலேரியா தொற்று பரவவில்லையெனினும், கடந்த ஆண்டுகளில் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியா தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

எனவே, மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற இந்தியா போன்ற நாடுகளுக்கு ஐயப்பன் தல யாத்திரைக்கோ அல்லது வேறு தல யாத்திரைகளுக்கோ செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம். எனவே, இந்தியா போன்ற நாடுகளுக்கு செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயிலிருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தொடர்புகொள்வதன் மூலம், அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ (தொ.பே.இல 021-2227924) தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும் - என்றுள்ளது.

# நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் மலையகப் பிரதிநிதிகளின் கருத்துகள்

நாடாளுமன்றத்தில் நேற்று (30) இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் பெருந்தோட்டத்துறை அமைச்சு குறித்த விடயதானத்தில் மலையகப் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துகளை முன்வைத்தனர்.

**இராஜாங்க அமைச்சர்**
**அ. அரவிந்தகுமார்**

வெள்ளையர்களினால் அழகாக உருவாக்கப்பட்ட தோட்டங்கள் இன்று சீரழிந்து கிடப்பதை பார்க்கும்போது மனவருத்தமளிக்கிறது. 1992ஆம் ஆண்டு பெருந்தோட்டங்கள் தனியாரிடம் நிர்வாகத்துக்கு கையளிக்கப்பட்டு, இன்று 30 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் பெரும் அழிவுக்குட்பட்டிருக்கிறது என்பதை விசனத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோட்டப் பராமரிப்பு முற்றிலும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பெருந்தோட்டக் கம்பனிகளும் ஒரு காரணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**ம. ராமேஷ்வரன் எம்.பி.**

பெருந்தோட்டங்களை அரசாங்கம் கம்பனிகளுக்கு குத்தகைக்கு கொடுத்தன் பின்னர் அந்தக் கம்பனிகள் இன்று வேறொரு நாட்டிலிருந்து இயங்குவதுபோன்று தெரிகிறது. பெருந்தோட்டங்களுக்கு நல்ல வருமானம் இருந்தபோதும், கம்பனிகளுக்கு ஏற்றவாறு பெருந்தோட்ட நிலங்களை மாற்றியமைத்துக்கொள்கிறார்கள். ஆனால், அங்கு வாழும் மக்களுக்கு எந்த சலுகையையும் பெற்றுக்கொடுப்பதில்லை. மக்களுக்கான வசதிகளை எல்லாம் அரசாங்கம் செய்துகொடுக்க அந்த வருமானத்தை மாத்திரம் கம்பனிகள் எடுத்துக்கொள்கின்றன.

**ப. திகாம்பரம் எம்.பி.**

பெருந்தோட்ட மக்கள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலேயே வாழ்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனாலும், அவர்களின் வாழ்க்கையில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை. எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கினால் மாத்திரமே இந்த மக்களை பாதுகாக்க முடியும். பெருந்தோட்டங்களினூடாக அதிகளவு வருமானம் கிடைக்கிறது என்று அரசாங்கம் குறிப்பிட்டாலும் அவர்களுக்கான நிவாரணங்கள் முறையாக கிடைப்பதில்லை.

**வடிவேல் சுரேஷ் எம்.பி.**

பெருந்தோட்டங்கள் இன்று காடுகளாக்கப்பட்டு வருகின்றன. தோட்டத் தொழிற்சாலைகள் அனைத்தும் சைலன்ட் பெக்ட்ரி என்று கூறுகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களை வஞ்சிக்கும் நிர்வாகத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சட்டத்திட்டங்களையும் மனித உரிமைகளுக்கு அப்பால் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனை ஜீரணிக்க முடியாத நிலையிலேயே பெருந்தோட்ட மக்கள் இருக்கின்றனர்.

**வேலுகுமார் எம்.பி.**

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபா நாளாந்த சம்பளமானது ஒரு கால கொடுப்பனவாகும். இதனை வழங்காது பெருந்தோட்டக் கம்பனிகள் இழுத்தடிப்புச் செய்துகொண்டிருக்கின்றன. காலத்துக்கு ஏற்றாற்போல் வழங்கப்படும் ஒரு கொடுப்பனவே இந்த ஆயிரம் ரூபா சம்பளம். ஆகவே, இந்த கொடுப்பனவை வழங்காது இழுத்தடிப்புச் செய்வது மாத்திரமல்லாது மக்களை ஏமாற்றி கம்பனிகள் இலாபம் சம்பாதித்து வருகின்றன.

**ம. உதயகுமார் எம்.பி.**

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நமக்கு கைகொடுத்தது பெருந்தோட்டத்துறைதான் என்பதை மறுக்க முடியாது. இவ்வளவு முக்கியதுவம் வாய்ந்த ஒரு துறைக்கு வரவு-செலவுத் திட்டத்தில் மிகவும் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாரபட்சம் காட்டியிருப்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. பெருந்தோட்டத் துறையை முன்னேற்றுவதற்கான எவ்வித வேலைத்திட்டங்களும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாததுடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாடு குறித்து எவ்வித அறிவிப்பும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை.

## ஜனாதிபதி ரணிலின்...

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய தினம் (நேற்றுமுன் தினம்) முன்னாள் ஜனாதிபதி தங்களுடைய மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குறித்து பேசினார். அவர் அதை விரும்புகிறார்போல. அவருடைய காலத்தில் அவர் அதை பேசாது இப்போது தோல்வி கண்ட ஒன்றை பேசுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை நிறைவேற்றுவதாக தெரிவித்தார்.

அவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வை தருவதாகக் கூறி, பல பேரிடம் கையை நீட்டி உதவ முடியுமா என சபையில் கேட்டார். இறுதியில் அதற்கான வாய்ப்பை உருவாக்கிவிட்டு இன்று மக்கள் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குறித்து ஏன் பேசினார் என்பது அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்த் தரப்புகள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து இதற்கான தீர்வைப் பெறவேண்டும். நாம் மாறி மாறி பேசி இந்த வாய்ப்பை நழுவ விடக்கூடாது - என்றார்.

## மகன், மகள்மார் இருவர் மீது...

ஹோமாகம, திபாங்கொட பகுதியில் தாயின் துணையின்றி தந்தையுடன் வாழ்ந்துவரும் இரண்டு மகள்களையும், ஒரு மகனையும் அவர்களது தந்தை பல வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தில் 47 வயதான தந்தை மத்தேகொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரின் மனைவி பத்து வருடங்களுக்கு முன்னர் பிள்ளைகளை விட்டுச்சென்றதையடுத்து தந்தை, 13 வயது மகன், 16 வயது இளைய மகள் மற்றும் 24 வயது மூத்த மகள் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

இந்நிலையில், சந்தேக நபரான தந்தையால் பல வருடங்காளாக இரு மகள்களும். 13 வயது மகனும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபரால் 16 வயது மகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி, பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று குறித்த நபரின் வீட்டுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மூவரிடமும் மேற்கொண்ட விசாரணையில், சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து குறித்த பிள்ளைகளின் தந்தை கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இரட்டைக் குடியுரிமை...

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (30) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்பாதே இதனை குறிப்பிட்டார்;.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இரட்டைக் குடியுரிமைகொண்ட விண்ணப்பதாரிகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது. கட்டணம் பாரியளவில் அதிகரிக்கப்படுவதாக அநேகமானவர்கள் இதுதொடர்பில் கேள்வி எழுப்பி வருகிறார்கள். உண்மையில் கட்டணத்தை அதிகரிப்பதற்கு மாறாக மறுசீரமைப்பு செய்துள்ளோம்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் எங்களுக்கு கடந்த வருடம் இதுதொடர்பான கட்டணங்களை டொலர்களிலேயே கோரினோம். டொலரின் பெறுமதி 180 ரூபாவாக காணப்பட்ட சந்தர்ப்பத்தில் இரட்டைக் குடியுரிமை கொண்டவருக்கான பிரதான கட்டணமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டது. அவ்வாறாயின் அதற்காக நபரொருவர் ஆயிரத்து 950 டொலரே செலுத்தவேண்டியிருந்தது.

ஆனால், தற்போது இரட்டைக் குடியுரிமை கொண்ட பிரதான விண்ணப்பதாரியொருவர் 2 ஆயிரம் டொலரை செலுத்தக் கோரியுள்ளோம். இதைத் தவிர, கட்டணம் பாரியளவில் அதிகரிக்கப்படவில்லை. ரூபாவின் பெறுமதியின் வீழ்ச்சி காரணமாக திணைக்களத்துக்கு இல்லாமல் போன நிதியை டொலரில் செலுத்தவே கோரியுள்ளோம் - என்றார்.

## இனிப்புகளுடன் கலந்து...

லொலிபொப் என்பவற்றுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை, வலானை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டுவந்த விற்பனை நிலையமொன்று கடந்த 28ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டிருந்ததுடன், இதன்போது 60 வரையிலான சிறியளவான போத்தல்களில் அடைக்கப்பட்டிருந்த நான்காயிரம் இனிப்புகள் மற்றும் 55 லொலிபொப் என்பவை இதன்போது கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இனிப்புகள் அடைக்கப்பட்டிருந்த போத்தல்களில் உற்பத்தி நிறுவனம், உற்பத்தி திகதி, காலாவதியாகும் திகதி மற்றும் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பாடசாலையின் மாணவர்கள் இந்த இனிப்புகள் மற்றும் லொலிபொப் என்பவற்றுக்கு அடிமையாகியுள்ளதாக பெற்றோர்களினால் வழங்கப்பட்ட தகவலுக்கமையவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த வர்த்தக நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த பாணந்துறை, சரிக்கமுல்ல மற்றும் நல்லுருவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு...

இது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக்கூட தயாராக இல்லை. தமிழ் இனம் தோற்றுவிட்டதாக யாருமே கருதக் கூடாது.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை தீர்க்கும் வகையில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுவே அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் 1980களின் ஆரம்பத்திலேயே தமிழ் மக்களினால் ஏகோபித்த குரலில் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை தொடர்பாக பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கின்ற சில இனவாத சக்திகள், தங்களின் அரசியல் நலன்களுக்காக தமிழ் மக்கள் தோல்வியடைந்துவிட்டார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவே பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்

எவ்வாறெனினும், தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை தற்போதைய ஜனாதிபதி தெளிவாக புரிந்து வைத்திருக்கின்றமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரின் செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## மலையகத்துக்கு 36,158...

வே. இராதாகிருஷ்ணன் எம்.பி., மலையகத்துக்கு 36 ஆயிரத்து 158 மலசலகூடங்கள் தேவைப்படுவதாக சுட்டிக்காட்டி அரசாங்கத்தின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

தற்போதைய சூழ்நிலையில் மலையக மக்கள் எவ்வாறு வாழ்க்கையை கொண்டு நடத்துவது? உணவு உண்டாலேயே மலசலகூடத்துக்கு செல்ல வேண்டிய தேவையேற்படும். உணவுதான் கிடைக்காதே? அதனால் மலசலகூடத்துக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. இதனால் அவர்கள் மலசலகூடங்களை அமைத்துக்கொள்வதற்கான தேவை அவர்களுக்கு இருக்காது என மறைமுகமாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

வரவு – செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு,

பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகள் குறித்து எவ்வித முன்மொழிவுகளும் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. அந்த மக்களின் வாழ்வாதாரம் - அபிவிருத்திக்காக ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை.

நாட்டுக்கு அதிக பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுப்பதும் மலையக மக்களே, நாட்டில் நலிந்த சமூகமாக வாழ்வதும் அவர்களே. ஆனால், இலாபம் சம்பாதிப்பது என்னவோ கம்பனிகளே.

ஆகவே, அரசு ஒரு முன்மொழிவை கொண்டு வந்திருக்கலாம். இந்த பெருந்தோட்ட மக்கள் இன்று படும் துன்பத்தை போக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

200ஆண்டுகளுக்கு முன்னர் 1823ஆம் ஆண்டு இந்நாட்டுக்கு கூலிகளாக பெருந்தோட்ட மக்கள் அழைத்துவரப்பட்டனர். 2023ஆம் ஆண்டுடன் இம்மக்கள் இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு 200 வருடம் பூர்த்தியடையவுள்ளது. எனினும், அவர்கள் இந்த நாட்டில் எவ்வித வசதிகளற்ற லயன் அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

பல போராட்டங்களுக்குப் பின்னர் பிரஜா உரிமை கிடைத்துள்ளது. எனினும், அவர்கள் இன்றும் லயன் அறைகளிலேயே வாழ்கின்ற சூழ்நிலை இருக்கின்றது.

தனிவீடுகள் - 40ஆயிரத்து 803, இரட்டை தனிகுடியிருப்பு - 20 ஆயிரத்து 392, தனி லயன் குடியிருப்புகள் - 70 ஆயிரத்து 444, இரட்டை அடுக்கு லயன் குடியிருப்புகள் - 65ஆயிரத்து 279, அடுக்குமாடி குடியிருப்பு - 1,197, 10, 991. தற்காலிக கூடாரங்களிலும் வசித்து வருகின்றனர்.

இவ்வாறு பார்க்கும்போது இன்னும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 714 வீடுகள் தேவைப்படுகின்றன. இந்த அரசுக்கு மாத்திரம் இதனை செய்யமுடியாது. இதனை வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொண்டு செய்யவேண்டும்.

அண்மையில் இந்திய அரசு 10 ஆயிரம் வீடுகளை வழங்கியுள்ளது. எனினும், அதற்கான நிலத்தை இன்னும் கப்பனிகள் ஒதுக்கிக் கொடுக்கவில்லை.

நாட்டில் கடந்த அரசாங்கம் ஆட்சிசெய்த போது 07 பேர்ச்சஸ் வழங்குவதாக அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை இந்த வீடுகளை கட்டுவதற்கான இடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை. இடமின்றி எவ்வாறு வீடுகளை அமைத்துக்கொள்ள முடியும்.

அதேபோன்று மலையகத்தின் மற்றுமொரு பிரச்சினையாகவுள்ளது மலசலகூடங்களே. 36 ஆயிரத்து 158 மலசலகூடங்கள் தேவைப்படுகின்றன. இதில் இரத்தினபுரி பகுதிக்கு 3ஆயிரத்து 888 மலசலகூடங்களும், நுவரெலியா மாவட்டத்துக்கு 10ஆயிரத்து 859 மலசலகூடங்களும் தேவைப்படுகின்றன - என்றார்.

## எயிட்ஸ் பாதிப்பில்...

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (30) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

தேசிய மதிப்பீடுகளின் அடிப்படையில், 2021ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 600 எச்.ஐ.வி. நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டாயிரத்து 900 பேர் அடையாளங்காணப்பட்டுள்ளனர். மேலும், இரண்டாயிரத்து 400 பேர் வரையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். அதாவது, மதிப்பீடுகளின் அடிப்படையில் 82 சதவீதமானவர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் 75 சதவீதமானவர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர். 35 சதவீதமானவர்கள் சிகிச்சையின்றி சமூகத்திலேயே இருக்கிறார்கள். எனவே, பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகளினால் இவர்களினூடாக இந்த நோய் நிலைமை பரவலடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

அதேபோன்று, கடந்த வருடம் 411 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டிருந்தார்கள். இந்த வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளில் 429 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இம்முறை ஆண்களே அதிகளவில் எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கடந்த வருடம் ஐந்தில் ஒன்றாக இருந்த ஆண் நோயாளர்களின் எண்ணிக்கை, இந்த வருடம் ஒன்றில் ஏழாக அதிகரித்துள்ளது. இந்த வருடம் அடையாளங்காணப்பட்ட 429 பேரில் 141 பேர் 15 – 30 வயதுக்கிடைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதாவது, 35 சதவீதமான இளைஞர்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான விகிதம் மிகவும் அதிகமாகவுள்ளது. 141 நோயாளர்களில் 8 பேர் மாத்திரமே பெண்கள். எனவே, ஆண்கள் இந்த நோயினால் பாதிப்படையும் வீதம் 20இற்கு ஒன்று என்ற அடிப்படையில் அதிகரித்துள்ளது. இந்த தரவுகளுக்கமைய பார்க்கும்போது இளையோர்களுக்கு இடையில் இந்த நோய் நிலைமை அதிகரித்துள்ளதையும், ஆணுக்கும் ஆணுக்கும் இடையிலான பாலியல் உறவுகள் அதிகரித்து வருவதையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

பொதுவான முழு மதிப்பீட்டை பார்த்தால் நூற்றுக்கு 50 சதவீதமானோர் ஆணுக்கும் ஆணுக்கும் இடையிலான பாலியல் உறவுகளினாலேயே பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, அதிக எச்சரிக்கை நிறைந்த ஆறு பிரிவினரை அடையாளங்கண்டுள்ளோம். இவர்களிடையே எச்.ஐ.வி. தொற்றினால் அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள் அல்லது இவர்கள் சமூக அல்லது சட்ட ரீதியான பிரச்சினைக்குரியவர்களாக காணப்படுகிறார்கள். ஆணும் ஆணும் பாலியல் உறவுகொள்ளும் குழுவினர், பாலியல் தொடர்பாளர்கள், பாதிப்புக்குள்ளாக பெண்கள், போதைப்பொருட்கள் உடம்புக்குள் புகுத்திக்கொள்பவர்கள், சுற்றுலாதுறைசார்ந்து கடமையாற்றுபவர்கள் மற்றும சிறைச்சாலைகள் ஆகிய பிரிவினரே அதிக எச்சரிக்கை நிறைந்த பிரிவினராக கருதப்படுகின்றனர்.

சிறைச்சாலைகளை பொறுத்தவரையில், மேற்குறிப்பிட்ட சகல பிரிவையும் சேர்ந்தவர்கள் கைதாகி சிறைச்சாலைகளுக்கு செல்லலாம். நீண்ட நாட்கள் அவர்கள் அங்கு தங்கியிருக்க வேண்டி ஏற்படும். இதன்போது விரும்பியோ விரும்பாமலோ சாதாரண பாலியல் உறவுகள் இடம்பெறக்கூடும். எனவேதான் சிறைச்சாலையையும் அவதானமிக்க பிரிவாக கருதுகிறோம்.

# மட்டு. ஊறணியில் வீடு உடைத்துக் கொள்ளை; 13 பவுண் நகை - 90 ஆயிரம் ரூபா பணம் திருட்டு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவி லுள்ள ஊறணி பகுதியில் பூட்டியிருந்த வீடொன்றை உடைத்து அங்கிருந்து தாலிக்கொடி உட்பட 13 பவுண் நிறைகொண்ட தங்க ஆபரணங்கள் மற்றும் 90 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் (29) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதி, ஊறணியிலுள்ள குறித்த வீட்டை சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை பூட்டிவிட்டு குடும்ப சகிதமாக வெளியே சென்று நேற்றுக் காலையில் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்த தாலிக்கொடி மற்றும் 13 பவுண் கொண்ட தங்க ஆபரணங்கள், பணம் திருட்டுப் போயுள்ளன.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து, தடவியல் பிரிவு பொலிஸார் சகிதம் சம்பவ இடத்துக்குச் சென்று விசாணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணிப் பிரச்சினை மற்றும் புல்மோட்டையிலுள்ள காணிப் பிரச்சினை சம்பந்தமாக நேற்று (30) நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாரக் ஆகியோர் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவை அவருடைய அமைச்சில் சந்தித்துப் பேசியதன் மூலம் இப்பிரச்சினை சம்பந்தமாக அறிக்கை ஒன்றை வழங்குமாறு காணி ஆணையாளர் நாயகத்திற்கு காணி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.
(படம் – திகாமடுல்ல நிருபர்)

# தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான - பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பது தொடர்பில் கவனம்

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஆராய்வு





பாரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பது தொடர்பில் தற்பொழுது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான முன்மொழிவை அமைச்சரவையின் அனுமதிக்கு முன்வைத்துள்ளதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் நாடாளு மன்றத்தில் அண்மையில் (25) கூடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் எழுப்பப்பட்ட விடயம் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரிய பெருந்தோட்டக் கம்பனிகள் புதிய செடிகளை நடுவதை முற்றாக நிறுத்தியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலாக தற்போதைய பயிர்களைப் பேணுவது அல்லது அந்தக் காணிகளிலுள்ள மரங்களை வெட்டி விற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். மேலும், அரசாங்கத்தின் பொது விடயமொன்றுக்கு சிறிய அளவிலான காணியையோ அவர்கள் வழங்குவதில்லை என அமைச்சர் குறிப்பிட்டார். அதற்கமைய, இந்தப் பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கு அவசியமான சட்ட வரைவு நடவடிக்கைகளுக்கு தமது தரப்பின் ஆதரவை வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். அதேபோன்று, பாரியளவிலான பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரித்து அவற்றை சிறியளவிலான தேயிலைக் கைத்தொழிலுக்கு வழங்கி அதன் மூலம் நாட்டின் தேயிலைக் கைத்தொழிலை விருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் முன்மொழிந்தார்.

அதேபோன்று, தேயிலைக்கான பசளை மற்றும் பூச்சிக்கொல்லி என்பன சந்தையில் விற்பனை செய்யப்படும் விலை மற்றும் அவற்றின் போதுமான தன்மை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மேலும், பிரதேசரீதியாகக் காணப்படும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பான சிக்கல்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, இசுறு தொடங்கொட, குணதிலக்க ராஜபக்ஷ, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, வீரசுமன வீரசிங்க, வீ.இராதாகிருஷ்ணன், சுதத் மஞ்சுள மற்றும் அகில எல்லாவல உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் கலந்துகொண்டனர்.

# காலாவதியான பொருட்களை விற்ற யாழ். மாநகர வர்த்தகர்கள் 12 பேருக்கு 3 இலட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பலசரக்கு கடைகளில் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 12 உரிமையாளர்களுக்கு யாழ். மேலதிக நீதவான் நீதிமன்று 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

யாழ். நகர்ப் பகுதியில் 06 பலசரக்குக் கடைகள், குருநகர்ப் பகுதியில் 05 பலசரக்குக் கடைகள் மற்றும் வண்ணார்பண்ணை பகுதியில் ஒரு கடை ஆகிய 12 கடைகளிலும் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த நிலையில் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 12 வர்த்தகர்களும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, 12 பேருக்கும் 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மேலதிக நீதவான், சான்று பொருட்களாக மன்றில் ஒப்படைக்கப்பட்ட காலாவதியான பொருட்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

# ஹெரோயின் - கைக்குண்டுகளுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது

ஹெரோயின் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளுடன் ஐந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ராகம பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.இதன்போது 32.720 கிராம் ஹெரோயின், கடவுச்சீட்டு, 05 கையடக்கத் தொலைபேசிகள், வேன் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், 20 மற்றும் 40 வயதுக்கிடைப்பட்ட குறித்த 5 சந்தேக நபர்களும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.இதையடுத்து அவர்கள் வத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், ஏழு நாட்கள் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவைப் பெற்று மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஒரு மாதத்துக்கு நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை

## மட்டக்களப்பில் நாளைமுதல் ஆரம்பம்

(கனகராசா சரவணன்)

புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட நுகர்வேர் அதிகாரசபை இன்று முதலாம் திகதிமுதல் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதிவரையில் வர்த்தக நிலையங்களை முற்றுகையிட்டு, விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட நுகர்வேர் அதிகாரசபை உதவி பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சதாத் தெரிவித்தார்.


இந்த புதுவருட பண்டிகைக் காலத்தில் சிறந்த பொருட்களை நுகர்வோர் பெற்றுக்கொடுக்க வேண்டிய நிலையில், வருட கடைசியில் உற்பத்திப் பொருட்களின் முடிவு திகதி முடிவடைந்த நிலையில் மனித பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்வதையும் அரச கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்வதை தடுப்பதற்காகவும் இந்த சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் இன்று முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 2023 ஜனவரி 7ஆம் திகதிவரையும் இந்த விசேட நடவடிக்கை இரு குழுக்களாக மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் சுற்றிவளைப்பு சோதனையில் ஈடுபடுமென அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சி சுகாதார சேவை பணிப்பாளரின் இடமாற்றத்தை ஆட்சேபித்து சுகாதார அமைச்சருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளராக கடமையாற்றிய ந.சரவணபவனுக்கு வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்திற்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து, சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.



22.11.2022ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் தொற்று வைத்தியசாலையில் இடம்பெற்ற மோசடிகளுடன் நேரடியாக தொடர்புபட்ட எவருக்கும் எதிராக இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படாத அதேவேளை, திட்டமிட்டுப் பழிவாங்கும் நோக்குடன் பக்கச்சார்பாக அவர் தண்டிக்கப்படுவதாகவே தோன்றுகிறது.

இது குறித்த உரிய விசாரணைகள் நடத்தப் பட்டால் அவர் அவரது திணைக்களப் பணியாளர்கள் செய்த குற்றங்களுக்காக அவர்களது பணிப்பாளர் என்ற வகையிலேயே அவர் குற்றச்சாட்டை எதிர் கொள்வது தெரியவரும்.

ஆகவே, முறையான விசாரணைகள் மூலம் குற்றம் செய்த உத்தியோகத்தர்கள் நிரூபணமாகும் வரை அவரை மீண்டும் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்குமாறு குறித்த கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள வடமாகாண தொற்றுநோய் வைத்தியசாலையில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மோசடிகள், முறைகேடுகள் குறித்த விசாரணைகள் நிறைவுபெறும்வரை வைத்தியர் ந.சரவணபவன் தற்காலிக இணைப்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடந்த 14.11.2022 தொடக்கம் இணைப்பட்டிருந்தார்

கிளிநொச்சியிலுள்ள வடமாகாண தொற்று நோய் வைத்தியசாலையோடு தொடர்பு பட்ட முறைகேடுகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆரம்ப புலன் விசாரணைக் குழுவானது கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமை யாற்றும் இரு அரச அதிகாரிகள் மற்றும் மூன்று அரச அலுவலர்கள் தாபன விதிக்கோவையின் பிரகாரம் குற்றங்கள் புரிந்துள்ளதாக கண்ட றிந்துள்ளது.

இதனடிப்படையில் குறித்த நபர்களுக்கு எதிராக மாதிரி குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் உரிய ஒழுக்காற்று அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாகவே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டம்





சர்வதேசத்தில் நீதி கோரி வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று (30) காலை 10.30 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

கொலையாளி ஜனாதிபதியாக உள்ள நாட்டில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும்? குடும்பங்களாக சரணடையும்போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29இற்கு மேற்பட்ட குழந்தைகள் எங்கே?, யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமலாக்கப்பட்டோர் என அவர்களின் குடும்பத்தையும் ஏமாற்றுகின்றது போன்ற பல்வேறு வசனங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# முல்லைத்தீவு கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட அறுவரை பொதுமக்கள் சுற்றிவளைத்து நையப்புடைப்பு







முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட 6 சந்தேக நபர்கள் பிரதேச மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு – சிவநகர் பகுதியில் வீடொன்றை உடைத்து கொள்ளையிட முற்பட் டவர்களே பிரதேச மக்களால் இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர்.பிரதேச மக்களால் பிடிக்கப்பட்ட 6 சந்தேக நபர்களும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலத்த காயங்களுக்குள்ளான ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு – இரணைப்பாலை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் யாழ்.சங்கானை பகுதியைச் சேர்ந்த ஐவருமே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர். சந்தேகநபர்களை நேற்று (30) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


## செலான் வங்கி பீஎல்.சி.

(2007ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்ட இலக்கம் 7 இற்கு அமைய PQ 9 என்ற குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சிபணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறிவிப்பது என்னவென்றால், வங்கிகளினால் கடன்களை மீளப்பெறுவதற்கான திருத்தப்பட்ட 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள் பிரிவு 8இன் கீழ் செலான் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2022/09/22ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

**கிளை: விஜயராம**
**கணக்கு இலக்கம் : 1350-12886524-001**

களுத்துறையை சேர்ந்த சாலனி பிரதீபா வல்பிற்ற "ஆர் அன்ட் எச். பஷன்ஸ்" என்ற பெயரிலான நிறுவனத்தின் ஏக உரிமையாளராக வர்த்தகத்தை முன்னெடுப்பவர் களுத்துறையில் வர்த்தக பதிவு இலக்கம் WSS 574இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன், களுத்துறையைச் சேர்ந்த சாலனி பிரதீபா வல்பிற்ற "கடப்பாட்டாளர்/அடகுவைத்தவர்" ஆக செயல்பவதுடன், செலான் வங்கி பீ.எல்.சி. (2007ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்ட இலக்கம் 07இன் கீழ் நிறுவன பதிவு இலக்கம் PQ9 இல் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு தீபானி ரங்கேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 03 ஓகஸ்ட் 2018 திகதியிடப்பட்ட 1810 இலக்க அடகுமுறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 17 ஜூன் 2019 திகதியன்று வரையிலான வட்டி பிரதான கணக்கு என்பன உள்ளடங்கலாக செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்டமுறி மீது தொன்னூற்று மூன்று இலட்சத்து எழுபத்தோராயிரத்து இருநூற்று இருபத்து இரண்டு ரூபா எழுபத்து ஐந்து சதம் (ரூபா 93,71,222.75) கொண்ட பணத்தொகை அத்துடன், 18 ஜூன் 2019 முதல் எண்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து அறுநூற்றுபதினொரு ரூபா அறுபத்து ஒன்பது சதம் (ரூபா 87,63,611.69) கொண்ட பணத்தொகைக்கான பதினெட்டு சத வீத (18%) வருடாந்தர வட்டி என்பன சொல்லப்பட்ட முறி தொடர்பாக வழங்கப்பட்ட சமமான தவணை முன்கூட்டிய கொடுப்பனவு வசதி வாய்ப்புகள் அத்துடன், செலான் வங்கி பி.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள 1810 சொல்லப்பட்ட இலக்க அடகுமுறி மூலம் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனங்கள் மற்றும் வளவுகளும், சொல்லப்பட்டதொன்னூற்று மூன்று இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து இருநூற்று இருபத்து இரண்டு ரூபா எழுபத்து ஐந்து சதம் (ரூபா 93,71,222.75) கொண்ட பணத்தொகையுடன் 18 ஜூன் 2019 திகதியிலிருந்து முன்சொல்லப்பட்ட வட்டி விகிதத்திற்கு அமைய விற்பனை நாள் வரையிலான வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13இன் கீழ் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத்தொகையையும் அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி சந்திமா கமகேயினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேலே குறிப்பிடு_செய்யப்பட்ட அட்டவணை

1) மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள ரைகம் கோறளவின் அத்திக்காரிபற்றுவில் உள்ள பண்டாரகம பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பண்டாரகம பிரதேச சபையின்உள்ளூர் அதிகாரசபையின் எல்லைக்கு உட்பட்ட ரைகம் வடக்கு-656A கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரைகம்கிராமத்தில் உள்ள "அமரிகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணிஈ உரிமம் பெற்ற நில அளவையாளர்கே.ஆர்.பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 12.03.2000 மற்றும் 04.06.2000 திகதிகள் இடப்பட்ட வரைபட இலக்கம் 1408இல்விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்குவெரலுகஹமடிற்றியோவிற்ற கிழக்கு இத்துடனான காணிதுண்டுகள் 2 மற்றும் 4 தெற்கு இத்துடனானகாணித்துண்டு 4 மேற்கு தெல்கஹாவத்தயில் உள்ள காணித்துண்டு 7இன் மிகுதியான பகுதி அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408இற்கு அமைவான பன்னிரண்டு பேர்ச் (ஏ0:ரூ0:பே12) விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

2) மேல் மாகாணம்,களுத்துறை மாவட்டத்தில் உள்ள ரைகம்கோறளவின் அத்திக்காரிபற்றுவில் உள்ள பண்டாரகம பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் உள்ளூர் அதிகாரசபையின் எல்லைக்கு உட்பட்ட ரைகம் வடக்கு-656A கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரிகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 12.03.2000 திகதி இடப்பட்ட வரைபட இலக்கம் 1408இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு வெரலுகஹமடிற்றியோவிற்ற கிழக்கு வரவெற்றிகட்டிய தெற்கு வரைபட இலக்கம் 1408இல் உள்ள காணித்துண்டு 3 மற்றும் காணித்துண்டு 4 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) மேற்கு வரைபட இலக்கம் 1408இல் உள்ள காணித்துண்டு 1, அத்துடன் பதினான்கு பேர்ச் (ஏ0:ரூ0:பே14.0) விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

3. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள ரைகம்கோறளவின் அத்திக்காரிபற்றுவில் உள்ள பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் உள்ளூர் அதிகாரசபையின் எல்லைக்கு உட்பட்ட ரைகம்
வடக்கு-656A கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள ""**அமரிகேவத்த மறுபெயர் மாறவத்த**" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர்கே.ஆர்.பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 12.03.2000 திகதி இடப்பட்ட வரைபட இலக்கம் 1408இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 2 கிழக்கு வரவெற்றிகட்டிய தெற்கு வரைபட இலக்கம் 349இல் உள்ள அமரிகேவத்த மறுபெயர் வாரவற்றவின் காணித்துண்டு C1 இன் மிகுதியான பகுதி மேற்கு வரைபட இலக்கம் 349இல் உள்ள அமரகேவத்த மறுபெயர் வாரவற்றவின் காணித்துண்டு C2, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408இற்கு அமைவான பத்து பேர்ச் (ஏ0:ரூ0:பே10) விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். அத்துடன், பின்வரும் காணிகள் மேலானதும் உடனானதுமான வழி உரிமை மற்றும் ஏனைய தொடர்புடைய உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன்,பின்வரும் காணிகள் மேலானதும் உடனானதுமான வழி உரிமை மற்றும் ஏனைய தொடர்புடைய உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1) முன் சொல்லப்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரகேவத்தமறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் கே.ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 12.03.2000 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1408 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 5, காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 2, கிழக்கு வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 3, தெற்கு வரைபட இலக்கம் 349 இல் உள்ள அமரிகேவத்த மறுபெயர் வெரவத்தவின் காணித்துண்டு C2. மேற்கு பிரதான வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408இற்கு அமைவான நான்கு பேர்ச் (ஏ0:ரூ0:பே4.0) விஸ்தீரணத்தைக் கொண்டது.

2) முன்சொல்லப்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் கே.ஆர்.பெரேராவினால்தயாரிக்கப்பட்ட 12.03.2000 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1408இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5 (பரபெட் சுவரின் ஒரு பகுதியை கொண்ட நிலத்தின் துண்டு) என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு தெல்கஹாவத்தையின் காணித்துண்டு 7 இன் மிகுதியான பகுதி கிழக்கு வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 4 தெற்கு வரைபட இலக்கம் 1408இல் உள்ள காணித்துண்டு 4 மேற்குபிரதான வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408இற்கு அமைவான பூஜ்யம் தசம் இரண்டு பேர்ச் (ஏ0:ரூ0:பே0.2) விஸ்தீரணத்தைக் கொண்டது.

**இயக்குனர் சபையின் கட்டளைக்கு அமைய**
**(திருமதி) வி.ஏ.பரணகம,**
**சட்டதரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, டிசம்பர் 01ஆம் திகதி, வியாழக்கிழமை

# போதைப்பொருளை ஒழிக்க இனியும் தாமதிக்கலாமா?

நாட்டில் மதுபாவனை 30 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் அவர்கள் தொடர்புகொள்ளும் நபர்கள், செல்லும் இடங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடி, சாதாரண வாழ்வில் மக்களால் நேரடியாக அவதானிக்கப்படும் நிலைமைக்கு வந்துவிட்டது. சமூகத்தின் எதிர்காலம் குறித்துப் பேரச்சமான சூழலை இந்த ஆபத்து ஏற்படுத்தி நிற்கிறது.

கஞ்சா போன்றவற்றைத் தாண்டி ஐஸ், ஹெரோயின் போன்ற சிந்தெட்டிக் ரக போதைப்பொருட்கள் மிக மோசமான ஆபத்தை ஏற்படுத்த வல்லவை.

ஐஸ் போதைப்பொருள் பயன்பாட்டால் மனநோய் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளதாக மனநோய் சிறப்பு மருத்துவர் டொக்டர் ரூமி ரூபன் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களையும் இளைஞர் சமூகத்தையும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இன்றைய சமூகத்தில் மனநோய்க்கும் ஐஸ் என்ற போதைப்பொருளுக்கும் தெளிவான தொடர்பிருக்கிறது. கேட்டால் ஐஸ் எடுத்தவர் என்கிறார்கள். இறுதியில் இவர்களுக்கு ஐஸ் போதைப்பொருளுளால் பல்வேறு மனநோய்களுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்களை - குறிப்பாக இளம் தலைமுறையினரை - இந்த ஐஸ் போதைபொருள் அழிக்கும் வகையில் காணப்படுகின்றது. இது இன்று இலங்கையில் ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் - என்று அவர் கூறுகிறார்.

பாடசாலை மாணவர்கள் மீது பெற்றோரின் கவனக்குறைவு சிறுவர்களை போதைப்பொருள் பாவனைக்கு தூண்டுவதற்கு உதவியுள்ளதாக டொக்டர் ரூமி ரூபன் தெரிவிக்கும் கருத்தில் பிழையிருப்பதாகத் தெரியவில்லை. மாணவனை அத்திசையில் நாட இடமளித்து - வாய்ப்புக் கொடுத்து - சந்தர்ப்பம் வழங்கி - பார்த்திருக்கும் சமூகத்தின் பெருங்குற்றம் இது.

இதற்கிடையில் ஊசி மூலம் போதைப்பொருளை நுகர்ந்து வந்த 15 வயது சிறுவன் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தி அதிர்ச்சிகரமானதாக இருக்கிறது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் குறித்த சிறுவனுக்கு காய்ச்சல் என யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், வைத்திய பரிசோதனையில் சிறுவனுக்கு கிருமித் தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிறுவன் ஊசி மூலம் போதைப்பொருட்களை நுகர்வதாக தெரியவந்துள்ளது. அவ்வாறு ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றியபோதே கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளை ஊசி மூலம் நுகர்ந்ததால், கிருமித்தொற்று ஏற்பட்டு, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை வீதம் தீவிரமாக அதிகரித்துள்ளதால் அவசரமாக செயற்பட்டு அதற்கொரு முடிவைக் கட்ட வேண்டும் அரசு.

மது பாவனை குறைந்துள்ளமைக்கு பிரதான காரணம் போதைப்பொருள் சமூகத்தில் ஊடுருவியிருப்பதே. இனியும் தாமதிக்காமல் சட்டத்தை இறுக்க வேண்டும் பாதுகாப்புத்துறை.

# சவூதி அரேபியாவின் முஹம்மது பின் சல்மானுக்கு தண்டனை விலக்கு அளித்திருக்கும் அமெரிக்கா

## 2018 பத்திரிகையாளர் ஜமால் கஷொக்கி கொலை தொடர்பில் இளவரசருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தடம்புரளும் சாத்தியம்

- சத்யா -

சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் முஹம்மது பின் சல்மானுக்கு அமெரிக்க நிர்வாகம் அண்மையில் தண்டனை விலக்கு (Immunity) அளித்திருக்கிறது.

சவூதி அரேபிய இராச்சியத்தின் அன்றாட அரசாங்க நிர்வாகத்தை கவனித்து உண்மையான ஆட்சியாளராக செயற்பட்டுவரும் அவருக்கு எதிராக 2018 ஒக்டோபரில் பத்திரிகையாளர் ஜமால் கஷொக்கி கொலை தொடர்பாக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு இதனால் தடம்புரளக்கூடிய சாத்தியம் இருப்பதாக கூறப்படுகிறது.



இளவரசர் முஹம்மது அண்மையில் சவூதி அரேபியாவின் பிரதமராக நியமிக்கப்பட்டதை அடிப்படையாக வைத்தே தண்டனை விலக்கு தீர்மானத்தை நிர்வாகம் எடுத்திருக்கிறது.

"கஷொக்கியின் கொடூரமான கொலை தொடர்பில் வொஷிங்டன் கடுமையான விசனத்தை வெளிப்படுத்தி, கொலைச் சம்பவத்தில் சவூதி அரேபிய அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதாக புலனாய்வு அதிகாரிகளின் ஆய்வை ஏற்றுக்கொண்டு தடைகளையும் விதித்தது. ஆனால், அரச தலைவருக்கு தண்டனை விலக்கு அளிப்பது என்பது வழமையான சர்வதேச சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும்" என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கடந்த வாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் வைத்து சவூதி அரேபிய பாதுகாப்பு ஏஜெண்டுகளால் கஷொக்கி கொலைசெய்யப்பட்ட சம்பவம் சவூதிக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளைப் பாதித்தது. இளவரசர் முஹம்மதையும் சவூதியையும் ஒதுக்கிவைக்கப்போவதாக ஜனாதிபதி ஜோ பைடன் சூளுரைத்திருந்தார். முன்னர் சவூதி ஆட்சியாளருக்கு நெருக்கமாக இருந்து பின்னர் அவர்களை கடுமையாக விமர்சிப்பவராக மாறி 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் எழுதிவந்த கஷொக்கியை கைதுசெய்வதற்கு அல்லது கொலைசெய்வதற்கு இளவரசர் முஹம்மது அனுமதியளித்ததாக அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ. உறுதியாக கருதியது.

அந்த குற்றச்சாட்டை மறுத்த இளவரசர் முஹம்மது கொலைக்கு பொறுப்பானவர்கள் விசாரணைசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக கூறினார். 37 வயதான இளவரசர் 2016 ஆம் ஆண்டில் இருந்து சவூதி இராச்சியத்தின் அன்றாட நிர்வாகத்தை கவனிக்கும் ஆட்சியாளராக செயற்பட்டுவருகிறார்.

கஷொக்கியை திருமணம் செய்யவிருந்த பெண்மணி ஹரிஸ் சென்ஜிஸும் இப்போது அரபுலகத்துக்கான ஜனநாயகம் (Democracy for Arab World Now) என்ற தன்னார்வ நிறுவனமுமே கஷொக்கி கொலை தொடர்பில் இளவரசர் முஹம்மதுவுக்கு எதிராக வழக்கை தொடுத்திருந்தனர். இந்த நிறுவனத்தை தாபிப்பதில் கஷொக்கிக்கும் பங்குண்டு.

இளவரசருக்கு தண்டனை விலக்கு அளிக்கும் அமெரிக்க நிர்வாகத்தின் தீர்மானத்தை சென்ஜிஸ் கடுமையாக கண்டனம் செய்திருக்கிறார். குறிப்பாக ஜனாதிபதி பைடனை குறை கூறிய அவர் "ஜமால் மீண்டும் இப்போது மரணமடைந்தார்" என்று வர்ணித்தார்.

அமெரிக்காவின் Dawn என்ற உரிமைகள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான சாரா லீ வைட்சன் பொறுப்புக்கூறலுக்கான உறுதிமொழியை மீறி பைடன் இளவரசர் முஹம்மதுவுக்கு தண்டனை விலக்கை உறுதிப்படுத்தியிருக்கிறார் என்று ட்விட்டர் சமூக ஊடகத்தில் பதிவுசெய்திருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் உக்ரெய்ன் மீது ரஷ்யா மேற்கொண்ட படையெடுப்பையடுத்து எரிபொருட்களின் விலைகளும் பணவீக்கமும் அதிகரித்த நிலையில் இளவரசர் முஹம்மது தொடர்பிலான தனது நிலைப்பாட்டை பைடன் தளர்த்தினார். கடந்த ஜூலையில் பைடன் ரியாத்துக்கு விஜயம் செய்தபோதிலும், சவூதி அரேபியா தலைமையிலான பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பான ஒபெக் எண்ணெய் உற்பத்தியை குறைத்தது.

இதையடுத்து தனது நீண்டகால பாதுகாப்பு பங்காளியான சவூதி இராச்சியத்துடனான உறவுகளை மீளாய்வுக்கு உட்படுத்தப்போவதாக அமெரிக்க நிர்வாகம் அச்சுறுத்தியது. ஒபெக் அமைப்பு எண்ணெய் உற்பத்தியைக் குறைத்ததால் சவூதிக்கான சகல ஆயுத விற்பனைகளையும் இடைநிறுத்தவேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸில் கோரிக்கை விடுக்கப்பட்டது. பாரம்பரியமாக சவூதி அமெரிக்க ஆயுதங்களிலேயே தங்கியிருக்கிறது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் முக்கிய பங்காளியாக விளங்கும் சவூதி அரேபியா உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடாகும். சவூதி ஆட்சியாளர்களுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று விரும்பும் அமெரிக்க ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் இளவரசர் முஹம்மதுவுக்கு தண்டனை விலக்கு அளிக்கும் தீர்மானத்தை கடுமையாக விமர்சிக்கக்கூடும். ஆனால், சவூதியில் இளவரசருக்கு இருக்கக்கூடிய முக்கியத்துவத்தையும் அமெரிக்க நிர்வாகம் கருத்தில் எடுத்து செயற்படவேண்டியிருக்கிறது என்று அவதானிகள் கூறுகிறார்கள். நடைமுறைச் சாத்தியமான அடிப்படையில் நோக்குகையில் கஷொக்கி கொலை தொடர்பான வழக்கில் வழங்கப்படக்கூடிய எந்த தீர்ப்பும், தோற்றுவிக்கக்கூடிய எந்த சூழ்நிலையும் எமக்கு பயன்தரும் என்று நினைப்பது சிரமம். அதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளே நீண்டகாலத்துக்கு முறுகல் நிலையில் இருக்கும் என்று மூலோபாய மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான நிலையத்தில் மத்திய கிழக்கு செயற்றிட்ட பணிப்பாளராக இருக்கும் ஜொன் ஆல்ரர்மான் கூறினார்.

அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இளவரசர் முஹம்மது கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறார். சமூக ஊடகங்களில் செய்த பதிவுகளுக்காக பல சவூதி அரேபியர்களுக்கு நீண்டகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடுமையான பழமைவாத நாடாக இருந்த சவூதியில் இளவரசர் முஹம்மது கொண்டுவந்த சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இளைஞர்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு இருப்பதாக கூறப்படுகிறது.

பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு அனுமதி, பரவலாக வெறுக்கப்பட்ட மத பொலிஸ் (Religious Police) படைக்கு முடிவு போன்றவை இளவரசரின் சீர்திருத்த முயற்சிகளின் விளைவானவை.

அரச குடும்பத்தின் உறுப்பினர்கள் உட்பட எதிராளிகளை களையெடுத்த பின்னரே இளவரசர் முஹம்மது அதிகாரத்தில் மேல்நிலைக்கு வந்திருக்கின்ற போதிலும், அவர் தனது தந்தையாரான 86 வயதான மன்னர் சல்மானுக்கு பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்று பல தசாப்தங்களுக்கு இராச்சியத்தை ஆள்வது நிச்சயம் என்று இராஜதந்திரிகளும் அவதானிகளும் கூறுகிறார்கள்.

சவூதி அரேபிய இளவரசர் முஹம்மதுவுக்கு தண்டனை விலக்கு அளிப்பதற்கு பைடன் நிர்வாகம் எடுத்த முடிவானது, அமெரிக்கா தனது நலன்களின் அடிப்படையிலேயே உலக நாடுகளில் இடம்பெறும் உரிமை மீறல்கள், சர்வதேச சட்ட மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் தொடர்பில் அதன் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கிறது என்பதற்கு புதிய ஒரு சான்றாகும்.

# சர்வதேச எய்ட்ஸ் தினம் இன்று

உலக எய்ட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நாள் எய்ட்ஸ் நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. எய்ட்ஸ் தினம் பற்றிய எண்ணக்கரு முதலாவதாக 1988இல் நடைபெற்ற, எய்ட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர் மாநாட்டில் உருவானது. அதன் பிறகு அரசுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பில் எயிட்ஸுக்கான உலகளாவிய நிகழ்ச்சியின் பொது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தோமஸ் நெட்டேர் எனும் இருவரால் 1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டதே உலக எய்ட்ஸ் தினம். தங்கள் யோசனையை இருவரும் எய்ட்ஸுக்கான உலகளாவிய நிகழ்ச்சியின் இயக்குனர் முனைவர் ஜோனதன் மன்னிடம் கொண்டு சென்றனர். முனைவர். மன்னுக்கு இது பிடித்துப் போகவே, அவர் அதனை அங்கீகரித்து, 1988ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் நாளை உலக எய்ட்ஸ் தினமாக கடைபிடிக்க பரிந்துரை செய்தார்.

எயிட்ஸ் மேலும் பரவாமல் தடுக்கவும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் உலகளாவிய இத்தினத்தின் நோக்கமாகும். எயிட்ஸ் பாதிப்புக்கு உள்ளானவர்களின் உணர்வுகளை மதிக்கவும் அவர்களின் உரிமைகளை மதிக்கவும் மக்களை பழக்குவது இதன் முக்கிய குறிக்கோளாகும். கல்வி மற்றும் விழிப்புணர்வு மட்டுமே எயிட்ஸ் தடுப்புக்கான சிறந்த மற்றும் சரியான சமூக மருந்து என்பதை உணர்ந்து விழாக்கள், நாடகங்கள், நாட்டியங்கள் ஆகியவற்றில் எயிட்ஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு அம்சங்களை இடம்பெறச் செய்து மக்களுக்கு விழிப்புணர்வு கருத்துகளைப் பரப்பச் செய்வதே இந்நாளின் நோக்கமாகும்.




# இன்றைய நாளில்...

* 1834 – தென்னாபிரிக்காவின் கேப் குடியேற்றத்தில் அடிமைத்தொழில் ஒழிக்கப்பட்டது.
* 1875 – வேல்ஸ் இளவரசர் (பின்னாளைய ஏழாம் எட்வேர்ட் மன்னர்) கொழும்பு வந்தார். இலங்கைத் தமிழர் சார்பில் சொலமன் ஜோன்பிள்ளை வரவேற்புரையைப் படித்தார்.
* 1924 – எஸ்தோனியாவில் கம்யூனிசப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
* 1959 – பனிப்போர்: அண்டார்டிக்கா கண்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் அக்கண்டத்தை அறிவியல் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.
* 1963 – நாகாலாந்து இந்தியாவின் 16ஆவது மாநிலமானது.
* 1988 – உலக எயிட்ஸ் தினம் ஐக்கிய நாடுகளினால் அறிவிக்கப்பட்டது.
* 2006 – முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் அவர் காயமெதுவுமின்றி தப்பினார்.

# நக்கல் நமசிவாயம்

ஆரம்பத்தில மாகாண சபை என்ற ரணில் இப்போ மாவட்ட சபைகள் என்கிறார்.. இன்னும் கொஞ்ச நாளில ரெண்டுமே இல்லையெண்டு சொன்னாலும் சொல்லுவார்..!



ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 30.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 2272 | 14 6340 |
| கனேடியன் டொலர் | 152 5710 | 164 6822 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 4563 | 41 5 35 |
| யூரோ | 260 0 68 | 275 3 45 |
| ஜப்பான் யென் | 1 4735 | 1 5811 |
| சிங்கப்பூர் டொலர் | 15 6817 | 160 87 1 |
| ஸ்ரேலிங் பவுன் | 32 727 | 335 64 4 |
| சுவிஸ் பிரான்ங் | 263 5026 | 282 0642 |
| ஐ.அ.டொலர் | 250 1373 | 260 6111 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1871 |
| குவைட் | குவைட் தினார் | 0,07 503 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1841 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,3011 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5263 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7666 |

# அரச - தனியார் வைத்தியசாலைகளுடன் ஆயுர்வேதத்தை இணைக்க யோசனை

## தேசிய பேரவை உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

### ★க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாற்றம் தேவையென அதிகாரிகள் சுட்டிக்காட்டு



ஆயுர்வேத வைத்தியத்துறையின் நிலைபேறான தன்மை மற்றும் அதன் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அதனை அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளுடன் இணைப்பது தொடர்பில் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவை அண்மையில் (26) கவனம் செலுத்தியது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடியபோதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், சுகாதார சேவையை விரிவுபடுத்துவது தொடர்பான தேசிய கொள்கைகளை தயாரிப்பதற்கான முன்மொழிவுகள் மற்றும் தற்போதைய தடைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், நிலையான கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கல்வி முறைமையை மறுசீரமைப்பதற்கான திட்டம் பற்றிய ஆரம்பகட்டக் கலந்துரையாடலொன்றும் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இந்தக் கலந்துரை யாடல் இடம்பெற்றது. பல்கலைக்கழக நுழைவுத் தேர்வான க.பொ.த. உயர்தரப் பரீட்சை, திறன்களைக் கொண்ட தலைமுறையை உருவாக்கும் வகையில் மாற வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அது தொடர்பில் நிலைமாறு காலமொன்று தேவை எனவும், இது தொடர்பான முன்னோக்கிய வழிகள் அடங்கிய முன்மொழிவொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் தேசிய பேரவை உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

மேலும், கல்வி முறையின் மூலம் தொழிற்பயிற்சி மற்றும் திறன்மிக்க தொழிலாளர்களை அங்கீகரித்து மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப் பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான விஜித பேருகொட, சீதா அறம்பேபொல, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, பவித்ரா வன்னியாராச்சி , வஜிர அபேவர்தன மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அடுத்தடுத்து இடம்பெற்ற குழுவின் இரு கூட்டங்களிலும் கலந்துகொண்டனர்.

# ராஜபக்ஷ சகோதரர்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு செலவிட்ட பணம்

## விரிவான தகவல்கள் வெளியாகின



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணங்களை விட அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான செலவு மிக அதிகம் என்பது தகவலறியும் சட்டமூலத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

பதவியில் இருந்த போது ராஜபக்ஷ சகோதரர்கள் இருவரும் வெளிநாட்டு பயணங்களுக்காக ரூ.44 மில்லியன் செலவிட்டுள்ளனர். இதில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரண்டு வெளிநாட்டு விஜயங்களுக்காக ரூ.36 மில்லியன் செலவிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மூன்று உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களுக்கு ரூ.7 மில்லியன் செலவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட ஐந்து உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களினால் மாத்திரம் 2021ஆம் ஆண்டு அரசு ரூ.40 மில்லியன் செலவிட்டுள்ளது. தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் வழங்கிய தகவல்களில் இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் வழங்கிய தகவல்கள் மூலம் ராஜபக்ஷ சகோதரர்கள் இருவரும் கடந்த ஆண்டு ஐந்து உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்காக மொத்தம் ரூ.447,39,184.91 செலவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2022 ஜனவரி 1ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்துக்கு உரிய தகவல்கள் கோரிய கோரிக்கை முதலில் நிராகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இது தொடர்பான மேன்முறையீட்டை பரிசீலித்த இலங்கை தகவல் உரிமை ஆணைக்குழு, கோரப்பட்ட தகவல்களை ஊடகவியலாளர்களிடம் வழங்குமாறு அலுவலகங்களுக்கு உத்தரவிட்டது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அலுவலகங்கள் 14 வேலை நாட்கள் அல்லது 21 நாட்களுக்குள் தகவல்களை அளிக்க வேண்டும் என்றாலும், அவர்கள் இதற்கு பத்து மாதங்களுக்கும் மேலாக எடுத்துக் கொண்டனர்.

கிடைத்த விவரங்களின்படி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரண்டு வெளிநாட்டு விஜயங்களுக்காக ரூ.36 மில்லியன் (ரூ.36, 970,864.14) செலவிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மூன்று உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களுக்கு ரூ.7 மில்லியன் செலவிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமரின் உத்தியோகபூர்வ விஜயங்களுக்கான செலவு மொத்த செலவில் 83 சதவீதமாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது நியூயோர்க் (அமெரிக்கா), கிளாஸ்கோ (இங்கிலாந்து) மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கான தனது விஜயங்களுக்காக ரூபா 77,68,320.77 செலவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விஜயங்களின் நோக்கம் ஜனாதிபதி செயலகத்தால் விளக்கப்படவில்லை.

நியூயோர்க் பயணத்திற்கு ரூ. 54,61,221.71. கிளாஸ்கோ பயணத்திற்கு ரூ. 17,85,210.42 மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கான அவரது விஜயத்திற்காக ரூ. 521,888.68 செலவிடப்பட்டது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பங்களாதேஷ் சுதந்திர தின கொண்டாட்டங்கள் மற்றும் ஷேக் முகர்ஜி ரஹ்மானின் பிறந்தநாளில் கலந்துகொள்வதற்காக மார்ச் 19, 2021 அன்று பங்களாதேஷுக்கு விஜயம் செய்ததற்காக ரூ. 10 மில்லியனுக்கும் அதிகமான (105,68,962.53) செலவிட்டுள்ளார்.

செப்டெம்பர் 10, 2021 அன்று G20 சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் இத்தாலிக்கு விஜயம் செய்தார். இத்தாலியில் நடந்த மாநாட்டில் அவரது குடும்ப உறுப்பினர்களில் சிலரும் கலந்துகொண்டனர். இதற்காக ரூ. 264,01,901.61 செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மற்றும் அவரது பிரதிநிதிகள் இத்தாலியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் உணவு உண்பது போன்ற புகைப்படத்தை ஒரு ஊடக இணையதளம் பகிர்ந்திருந்தது. அது அப்போது அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

# நல்லூர் பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம் – நல்லூர் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று (30) தவிசாளர் ப.மயூரனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலா ஒரு உறுப்பினர் என 15 உறுப்பினர்கள் வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.அதேவேளை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் 6 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் 5 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும் சுயேச்சைக்குழு சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் தலா ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மஹரகம வைத்தியசாலை ஊழியர் போதைப்பொருட்களுடன் கைது

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் ஊழியர் ஒருவர் போதைப்பொருளுடன் வைத்தியசாலைக்கு அருகில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நுகேகொடை மிரிஹான ஊழல் எதிர்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் சுகாதார உதவியாளராவார். அவரிடமிருந்து 5 கிராம், 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் சுமார் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 10 கிராம் கேரள கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த வைத்தியசாலை ஊழியர் ஒருவர் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சாவை பொதி செய்து விற்பனை செய்வதாக நுகேகொடை பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜனசாந்த கஹடதெனியவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் கடமைக்குச் சென்று கொண்டிருந்தபோது அவரை சோதனை செய்ததில் சிறிய பொட்டலங்களில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருள் பொதிகள் காணப்பட்டதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# யாழில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக கல்விச்சமூகத்திற்கு விழிப்புணர்வு



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள்மற்றும் மாணவ தலைவர் களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று (30) காலை 9 மணியளவில் இந்நிகழ்வு ஆரம்பமானது.

இதன்போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொறுப்புகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரியின் கடமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன், யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள், பொலிஸார், யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ஜனவரி முதல் வாகனச் சாரதிகளிடம் போதைப்பொருள் பரிசோதனை

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த

பல்வேறு போதைப்பொருட்களை உட்கொண்டு வாகனம் ஓட்டுபவர்களை கண்டறியும் வேலைத் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில் இருந்து இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

இதற்காக சுமார் 5,000 போதைப்பொருள் பரிசோதனை சாதனங்கள் பொலிஸாருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மேல் மாகாணத்தில் ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களை உட்கொண்டு வாகனம் ஓட்டுபவர்களை கண்டறியும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம்.

போதைப்பொருள் அச்சுறுத்தல் காரணமாக இலங்கை பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. இது சாரதிகளுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

முன்னர், போதைப்பொருள் உட்கொண்டு வாகனம் ஓட்டுபவர்களைக் கண்டறிய மருத்துவப் பரிசோதனைகள் தேவைப்பட்டன. இருப்பினும், இந்த புதிய கருவி மூலம், அந்த இடத்திலேயே சோதனை நடத்தி, இதுபோன்ற சாரதிகளை கண்டறிய முடியும்,

போதைப்பொருள் பாவனையினால் வருடத்திற்கு 400 வீதி விபத்துகள் பதிவாகின்றன. இதன் தாக்கத்தைக் குறைக்க விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# ஆசிரியர் இடமாற்றத்திற்கு புதிய பொறிமுறை அறிமுகம்

## கல்வியமைச்சர் சுசில் தகவல்

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கான புதிய பொறிமுறையை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்மொழிந்துள்ளார்.கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் பிரேமஜயந்த, மேலும் கூறியதாவது,

அரச ஊழியர்களை இடமாற்றம் செய்வது போன்று ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாமல் மாணவர்களின் தேவைக்கேற்ப பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அரச நிறுவனங்களைப் போன்று இடமாற்றங்கள் வழங்கப் படுமாயின், பாடசாலைகள் பாடத்திட்டத்தை உள்ளடக்குவதற்குப் போராட வேண்டி வரும்.நிர்வாக விடயங்களில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படாததால் வேலைவாய்ப்பு, தொழிற்சங்க விவகாரங்கள் மற்றும் இடமாற்ற வாரிய மோதல்கள் போன்ற பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. நாட்டில் தேவையான தொழில்நுட்பம் காணப்படுகின்ற போதிலும் அது உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

NLB

தேசிய லொத்தர் சபையினால் சீட்டிழுக்கப்படும் NLB டொலர் ஃபோர்ச்சூன் லொத்தர் சீட்டு 2022 டிசம்பர் 09 ஆம் திகதி சீட்டிழுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக, சுப்பர் பரிசான அமெரிக்க டொலர் 100,000 பணம் 2022.12.09 ஆம் திகதி அன்று நிலவும் அந்நியச் செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாவில் வழங்கப்படும். (இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின் பேரில்)

திகதி 29.11.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4954
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,976,400.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 2 8 9 9 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,105,480.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3196
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,947,160.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 39 42 44 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,444,754.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1409
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,055,080.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 7 8 1 6 2 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,326,962.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 984
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,425,140.00
N 06 13 18 51 வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 134,510,393.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 263
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,958,640.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 21 43 57 59 விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,662,692.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1302
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,513,940.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.283,291,366.00
N 04 02 44 46 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மலையகத்தில் கடும் மழை; ஹப்புத்தளையில் மண்சரிவு!



(பதுளை நிருபர்)

மலையகத்தில் அடைமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மண் சரிவும் நிலம் தாழிறங்கும் அபாயமும் ஏற்பட்டு வருகின்றது. ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரதேசத்திலுள்ள ஹப்புத்தளை, தியத்தலாவை, கஹகொல்ல, பின்கேதென்ன, கோமாரிகொட மற்றும் பண்டாரவளை, வெலிமடை போன்ற பிரதேசங்களில் பலத்த மழை பெய்து வருவதால் ஹப்புத்தளை பிரதேச சபைக்கு எதிரிலுள்ள தியத்தலாவை ஜும்மா பள்ளிவாசல் கட்டடத்திற்கு பின்னுள்ள அரச வன பிரதேசத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள ஜும்மா பள்ளிவாசல், கடைகள் மற்றும் அதன் அருகிலுள்ள வீடுகளில் இருப்போரை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஹப்புத்தளை பிரதேச செயலாளர் நேற்று (30) அறிவித்தார்.

இதனையடுத்து குறித்த கட்டடத் தொகுதியிலுள்ள பள்ளிவாசல், கடைகள் மற்றும் வீடுகளில் இருந்து பொருட்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் பிரதேசவாசிகள் ஈடுபட்டனர். கடந்த இரு நாட்களாக தியத்தலாவை பிரதேசத்தில் இடைவிடாது கனமழை பெய்து வருவதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்பகுதிவாழ் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறும் ஹப்புத்தளை பிரதேச செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சிவனொளிபாதமலை - குருவிட்ட வீதியைப் புனரமைக்குமாறு யாத்திரிகர்கள் கோரிக்கை

(பலாங்கொடை மேலதிக நிருபர்)

2022/2023ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரை மேற்கொள்ளப்படும் குருவிட்ட - சிவனொளிபாதமலை வீதியை புனரமைக்குமாறு சிவனொளிபாதமலை யாத்திரை ஏற்பாட்டு குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று குருவிட்ட பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்வருடம் சிவனொளிபாதமலை யாத்திரையை முன்னிட்டு பெல்மதுளை - கல்பொத்தாவல விகாரையில் இருந்து புத்தர் சிலையை தாங்கிய 4 ஊர்வலங்களில் ஒன்று இவ்வழியாக பயணிக்கவுள்ளது. இவ்வழியே சிவனொளிபாத மலையை அடைய 13 கிலோமீற்றர் மாத்திரமே உள்ள போதிலும் பயணிப்பதற்கு கடினமாகவுள்ளதால் குருவிட்ட - வர்ணகலை வரையிலான குண்டும் குழியுமான வீதியைப் புனரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த வீதி கடந்த காலங்களில் பயன்படுத்தப்படாமல் காடுகள் வளர்ந்து யாத்திரிகர்கள் பயணிக்க முடியாதளவுக்கு உள்ளதால் இதனைப் பழுதுபார்த்து சீர் செய்ய வேண்டிய அவசியம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

எனினும், இதற்கு குருவிட்ட பிரதேச சபையிடம் நிதியில்லாமையால் சப்ரகமுவ மாகாண ஆளுநரிடம் நிதிக் கோரிக்கை விடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் வீதியை சுத்தம் செய்ய அவசியமான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இவர்களுக்கான கூலிகளை வழங்குவதற்கும் மாற்றுவழிகளை பயன்படுத்துவது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. இதன்போது சிவனொளிபாதமலை யாத்திரிகர் குழுவினர் மற்றும் குருவிட்ட பிரதேச சபை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மஸ்கெலியா பிரதேச மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்க கலந்துரையாடல்





(இராகலை நிருபர்)

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரை அண்டிய மக்கள் குடியிருப்புகள், கடைத்தொகுதிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் மஸ்கெலியா நகரில் அண்மையில் இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார். இதன்போது நீண்ட காலமாக மஸ்கெலியா நகரை அண்டிய மக்கள் குடியிருப்புகள், கடைத்தொகுதிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதில் இழுபறி நிலை இருந்து வந்தது எனவும் இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட அரசாங்க செயலாளர் நந்தன கலபட மற்றும் அம்பகமுவ பிரதேச செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்விடயம் தொடர்பாக காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுடன் கலந்துரையாடியதாகவும் தெரிவித்த அவர் இவ்விடயத்துக்குத் தேவையான தகவல்களை திரட்டி சமர்ப்பித்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# உக்குவளையில் வைரஸ் காய்ச்சல் பரவும் நிலை

(உக்குவளை நிருபர்)

உக்குவளை பிரதேசத்தில் ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவிவருவதாக அறிவிக்கப்படுகிறது. சிறிது தலைவலியுடன் ஆரம்பித்து பின்னர் உடல்வலி மற்றும் இருமலுடன் இக்காய்ச்சல் ஏற்படுவதாகவும் இது சுமார் 5 அல்லது 6 நாட்கள் நீடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, உக்குவளை பிரதேசத்தில் தினம்தோறும் 2 அல்லது 3 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்திருந்த நிலையில் சமீபத்தில் டெங்கு தொற்றிய மாணவியொருவர் (13 வயது) மாத்தளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று பின்னர் மரணமான தகவலும் வரக்காமுர எனுமிடத்தில் பதிவாகியுள்ளது.

எனவே, காய்ச்சலுக்கான ஏதேனும் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அவர்களை வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அதிகாரிகள் மக்களை அறிவுறுத்தியுள்ளனர். தற்போது மீண்டும் கொவிட்-19 பரவும் நிலையும் தோன்றியிருப்பதால் இது குறித்தும் மக்கள் அவதானம் செலுத்துவதுடன் வழங்கப்பட்ட சுகாதார வழிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றி நடந்துகொள்ளுமாறும் அவர்கள் அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

# சென்.மாக்றட் தோட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்

(இராகலை நிருபர்)

வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட உடப்புஸ்ஸலாவை பிரதேசம் பிளாரமெண்ட் தோட்டப் பிரிவான சென்.மாக்றட் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 10 வருடங்களாக அன்றாட தேவைக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

சென்.மாக்றட் தோட்டத்தில் 175 தொழிலாளர் குடும்பங்கள் வசிக்கின்ற நிலையில் இதில் 92 குடும்பங்களுக்கு முறையாக குடிநீர் வசதியில்லை என்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இத்தோட்டத்தில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு குடிநீர் வழங்க 1991இல்






MTIP சமூக நிறுவனத்தினூடாக பிரதான குடிநீர் தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. எனினும், கடந்த 10 வருடங்களாக இது தோட்ட நிர்வாகத்தால் முறையாக பராமரிக்கப்படாத நிலையில் முறையான நீர் விநியோகம் இடம்பெறவில்லை எனவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, சென்.மாக்றட் புதிய கிராமத்தில் வசிக்கும் 83 குடும்பங்களுக்கு 'பாம்' நிறுவனம் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகம் சீராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தோட்டத்தின் பிரதான குடிநீர் தாங்கியிலிருந்து பிறிதொரு குடிநீர் தாங்கிக்கு விநியோகம் செய்யப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் இயந்திரம் பழுதடைந்துள்ளதாகவும் இதனை தோட்ட நிர்வாகம் பழுதுபார்க்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தினமும் அதிகாலை தோட்ட நிர்வாகம் வழங்கும் சொற்ப நீரைப் பெற்றுக்கொள்ள குழாய்களுக்கு அருகில் பல மணிநேரங்கள் காத்திருப்பதால் தொழிலாளர்களும் மாணவர்களும் கடுமையாகப் பாதிக்கப்படுவதாகவும் இது குறித்து தோட்ட நிர்வாகத்திற்கு பலமுறை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சென். மாக்றட் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தோட்ட நிர்வாகம், பிரதேச அரசியல்வாதிகள், சமூக நிறுவனங்கள் என்பன முன்வந்து இந்த குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று தோட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பால் - பால்நிலை வன்முறைகளற்ற ஆரோக்கியமான வேலைச்சூழல் தொடர்பான கலந்துரையாடல்









(யாழ். நிருபர்)

சொலிடெரிட்டி சென்டர் (Solidarity Center) நிறுவனத்தின் அனுசரணையில் பால் மற்றும் பால்நிலை வன்முறைகளற்ற ஆரோக்கியமான வேலைச்சூழல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் (29) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அலுவலக வேலைச்சூழலில் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் முன்னேற்றங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அலுவலர்களுக்கு காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் அலுவலர்களால் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கான சாதகமான தீர்வுகளைப் பெற்றுத்தருவதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கூறினார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கி.தயாபரி, மாவட்ட இணைப்பாளர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.லேணுகாராணி மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டம்



யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (29) பிற்பகல் 3 மணியளவில் மாபெரும் நடைபவனி இடம்பெற்றது.

குறித்த நடைபவனியானது துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து ஆரம்பமாகி குருநகர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்துக்கு முன்னால் நிறைவுற்றது.

இந்தப் பேரணியில் விரிவுரையாளர்கள், மாணவர்கள், உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அதேவேளை, எதிர்வரும் 04ஆம் திகதியன்று காலை 9 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சமிந்த மகேஷ் எதிரிசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

# போதைப்பொருளை விற்பனைசெய்யும் நோக்கில் பொதி செய்துகொண்டிருந்தவர் யாழில் கைது!

(யாழ். நிருபர்)

தனது வீட்டில் வைத்து போதைப்பொருளை விற்பனைசெய்யும் நோக்குடன் பொதியிட்டுக்கொண்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டில் வைத்து போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அவரது வீட்டை முற்றுகையிட்டபோது, போதைப்பொருளை விற்பனை செய்வதற்காக சிறு சிறு பொதியாக போதைப்பொருளை பொதியிட்டுக்கொண்டிருந்தவேளை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரிடமிருந்து 56 ஆயிரம் ரூபா பெறுமதியான 1.56 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டதாகவும், சந்தேகநபரை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். போதனாவில் 11 மாதக் குழந்தை உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக சேர்க்கப்பட்டிருந்த 11 மாதங்களேயான குழந்தை உயிரிழந்துள்ளது.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த செல்வக்குமார் ஜீவிதா என்ற 11 மாதக் குழந்தைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை திடீர் சுகவீனம் ஏற்பட்டமையால், காரைநகர் வலந்தலை வைத்தியசாலையில் பெற்றோர் சேர்த்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்டபோதிலும், அங்கு சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

# வேம்பிராய் பொது மயானத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வேம்பிராய் பொது மயானத்தை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தை சாவகச்சேரி பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

பிரதேச சபையின் 20 இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் புதிய எரி கொட்டகை மற்றும் மயானத்திற்கான உள்ளக வீதி ஆகியன அமைக்கப்படவுள்ள நிலையில், நேற்று முன்தினம் (29) பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையிலான குழுவினர் மயானத்திற்கு கள விஜயம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் பாலமயூரன், நகரசபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் விஜயம் மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

# முக்கியமான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இல்லை!

## சுகாதார அமைச்சர் கெஹேலிய அறிவிப்பு







அத்தியாவசியமான 14 மருந்துகளின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக சீனாவால் வழங்கப்பட்ட 28 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையைப் பயன்படுத்தியிருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் வதந்திகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையின் தேவைகளை நிவர்த்திசெய்வதற்காக இந்தியக் கடன் உதவியின் கீழ் கிடைக்கப்பெற்ற 200 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளமை குறித்தும் அமைச்சர் மேலும் விளக்கமளித்தார்.

இந்த 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து கிடைத்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியில் எஞ்சியுள்ள 35 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் குழு அண்மையில் (24) நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல இந்தக் கருத்துகளை முன்வைத்தார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரணமாக ஏற்பட்டுள்ள கேள்விகளால் இலவச சுகாதாரத் துறை சவால்களை எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில், தனியார் வைத்தியசாலைகள் அதிக கட்டணத்தை அறவிடுவது குறித்தும் இங்கு கவலை வெளியிடப்பட்டது. அரசாங்க வைத்தியசாலைகளை சரியாகப் பராமரிக்கத் தவறியமை மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்கள் இன்மையால் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளின் சேவையைப் பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அடுத்த ஆண்டுக்குள் அரசாங்க வைத்தியசாலைகளின் சேவைகளை நாடுவோரின் எண்ணிக்கை 25% முதல் 30% வரை அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது என்று அமைச்சர் கூறினார். நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பங்கள் தனியார் வைத்தியசாலையின் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என்றார்.

அரசாங்க ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் சம்பளங்களை வழங்குவதற்கு நிதி அமைச்சு முக்கியத்துவம் அளித்து பணத்தை ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் வலியுறுத்தினார். இதற்கு அடுத்ததாக சுகாதாரத் துறைக்கே அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இருந்தபோதும் இது போதுமானதாக இல்லையென்றும் குறிப்பிட்டார்.

மருத்துவ பணியாளர்களின் இடமாற்றங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மருத்துவ தொழில்நுட்பப் பணியாளர்கள் தாம் வசிக்கும் இடங்களிலிருந்து தூரத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பதால் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

5 – 6 வருடங்களுக்கு உட்பட்ட அனைவரையும் இடமாற்றம் செய்வது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார். நிலையங்களுக்கிடையில் பரஸ்பர பரிமாற்றத்திற்கு இணங்க விரும்பும் ஒருவரைக் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதால் இடமாற்றங்களை ஏற்பாடு செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் சீர் அஹமட், இராஜாங்க அமைச்சர்களான (வைத்திய கலாநிதி) சீதா அரம்பேபொல, சிசிர ஜயகொடி, நாடாளுமன்ற உறுப்பினர்களான (வைத்திய கலாநிதி) ராஜித சேனாரத்ன, மஹிந்தானந்த அளுத்கமகே, அசோக அபேசிங்ஹ, வீரசுமன வீரசிங்ஹ, சிவஞானம் சிறிதரன், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.





**யாழ்ப்பாணம் மாநகர சபை, தமது சபை எல்லைக்குள் கழிவுகளை கொட்டுவதை நிறுத்த வேண்டும் எனக் கோரி மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள் அப்பகுதி மக்களுடன் இணைந்து நேற்று புதன்கிழமை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் கல்லுண்டாய் பிரதேசத்தில் யாழ்.மாநகர சபை கழிவுகளை கொட்டி வருகிறது. அதனால் அந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள், அப்பகுதி மக்களுடன் இணைந்து மாநகர சபை தமது எல்லைக்குள் கழிவுகளை கொட்டக்கூடாது எனக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். (யாழ். நிருபர்)**

# இலங்கைக்கான புதிய பிரான்ஸ் தூதுவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா சந்திப்பு

இலங்கைக்கான புதிய பிரான்ஸ் தூதுவர் ஜோ பஸ்வா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.




நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார். இதன்போது வரவு-செலவுத்திட்டக் காலம் மற்றும் நாடாளுமன்றப் பணிகள் போன்று இரு நாடுகளிலும் காணப்படும் நாடாளுமன்ற



முறைமை மற்றும் அரசியல் கட்டமைப்பு என்பன தொடர்பில் இரு தரப்பினரும் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

2023இல் பிரான்ஸ் - இலங்கை இராஜதந்திர உறவுகளுக்கு 75 வருடங்கள் பூர்த்தியடைவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், அந்த உறவுகளை வலுப்படுத்துவதற்கு தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக புதிய பிரான்ஸ் தூதுவர் ஜோ பஸ்வா சபாநாயகரிடம் குறிப்பிட்டார்.

# ஐந்தாம் ஆண்டில் கால்பதிக்கும் கெப்பிட்டல் வானொலி










இலங்கையில் ஒரு புதிய பரிணாமமாக நிமிர்ந்த நன்நடையில் நேர்கொண்ட பார்வையில், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும், கலைத்தேடலுக்கும் ஏற்றாற்போல் புதியன செய்து புதுவிதிப்படைப்பதற்காக தடைகள் பல தகர்த்து இலட்சக்கணக்கான ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்போடு, வானொலிசார் ஜாம்பவான்களின் திடமான திட்டமிடலுடன் அதுவரைக் கும் கலைப்பசியோடு காத்திருந்த இளையவர் களின் துடிப்புமிக்க ஆர்வத்துடன் உறுதியான முகாமைத்துவத்துடனும் நேர்த்தியான ஒலிநயத்துடனும் 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி "இது நம்ம ரேடியோ" என்னும் மகுட வாசகத்தை சுமந்தவாறு FM 94, 103.1 என்னும் பண்பலைகளிலும் WWW.CAPITALFM.LK என்னும் இணையத்தளத்தின் ஊடாகவும் தன் அத்திவாரத்தின் அத்தியாயத்தை ஆரப்பித்தது கெப்பிட்டல் FM.

காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றவகையிலான நேர்த்தியான நிகழ்ச்சிகள், சிறப்பான பாடல் தெரிவுகள், நேயர்களுக்கிடையில் நெருங்கிய நட்புறவு, அதிரும் பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சிகள், நாட்டு நடப்புகளை உண்மைத்தன்மையுடன் உடனுக்குடன் வழங்கும் செய்திப் பிரிவினர், துடிப்புமிக்க இளம் அறிவிப்பாளர்கள், அவர்களை வழிநடத்தும் ஆளுமைகள், பட்டிதொட்டி எங்கும் விரும்பிக்கேட்கத் தோன்றும் நிலைய குறியிசைகள், பௌர்ணமி தின அமானுஷ்ய நாடகங்கள் என அடுத்த தலைமுறைக்கும் புதுமைகளை தரக்கூடிய பல படைப்புகளோடு ஐந்தே ஆண்டுகளில் தன் வெற்றிப்பயணத்தில் உச்சந்தொட்டு மக்கள் மத்தியில் விரும்பிக்கேட்கும் வானொலியாக தன் நாமத்தை பதித்துக்கொண்டது கெப்பிட்டல் FM.

TRYMASS MEDIA NETWORK நிறுவனத் தலைவர் வின்சேந்திரராஜனின் எண்ணக்கருவில் உருவான கெப்பிட்டல் FM திருமதி சுமதி வின்சேந்திரராஜன், நிதர்ஷன் வின்சேந்திரராஜன், விதுர்ஷன் வின்சேந்திரராஜன் ஆகியோர் பணிப்பாளர்களாக இருந்து திறம்பட வழிநடத்துகிறார்கள்.

இவர்களுடன் கெப்பிட்டலின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக லீ சிங் மே, அலைவரிசை பிரதானியாக K.C பிரகாஷ், சிரேஷ்ட முகாமையாளராக A.L ஜவீர். நிகழ்ச்சி முகாமையாளராக T. தரணிதரன், தலைமை நிர்வாகி மற்றும் இசைக் கட்டுப்பாட்டாளராக S.T. ரவுப், உதவி முகாமையாளர்களாக திருமதி ஹம்சி மாலன், ஆகாஷ் ரஜீவ உட்பட அறிவிப்பாளர்களான பிரவீனா, பிருந்தா, கிருசாந்தினி, அழகேந்திரன், குருஈஸ்வர் திரேஷ்குமார், கெலிஸ்டஸ், சஞ்சய், ரீஜிவன்,ரேகாசினி, கனுசியா ஆகியோருடன் செய்திப்பிரிவு முகாமையாளராக டில்ஷன் தாலிப், வெளிக்கள செய்தி முகாமையாளராக பிரஷாந்தன் மற்றும் செய்தியாசிரியர்களான பாசித் ஏ நியாஸ், வினிப்பிரியா, பிரசாந்தி, யதுஷ் மற்றும் video editorராக வர்ணா, ரூபன் போன்றோரும் சிறப்பாக கடமையாற்றுகிறார்கள்.

இன்று எதிர்பார்ப்புமிக்க பண்பலையாக வும் பல வானொலிகளுக்கு போட்டி வானொலியாகவும் இன்னொரன்ன சவால்களை எதிர்கொண்டு தடைகள் பல தகர்த்து நேயர்களின் நெஞ்சம் நிறைந்த வானொலியாக மாறியிருக்கும் கெப்பிட்டல் FM நேர்த்தியாக தன்னுடைய நிகழ்ச்சிகளை வடிவமைத்திருக்கிறது.

இப்போது வானொலியோடு கெப்பிட்டல் தொலைக்காட்சி, கெப்பிட்டல் தரிசனம் தொலைக்காட்சி என கெப்பிட்டல் குழுமம் தன்னை இலங்கை ஊடகப்பரப்பில் இன்றளவில் நிலைநிறுத்தியுள்ளது என்பதை கெப்பிட்டல் குழுமம் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

குறுகிய காலத்திற்குள் பல இலட்சக் கணக்கான நேயர்களை தேடி எதிர்பார்த்ததைவிடவும் மக்கள் மத்தியில் அதிகமான வரவேற்பை பெற்று, இலங்கையின் இசைத்துடிப்பென ஒவ்வொரு இதயத்திலும் துடித்து, அதன் காருண்யத்தினால் பல உதவிகளை கொடுத்து, கேட்போருக்கெல்லாம் தங்கக்காசை அள்ளி வழங்கி நம்ம ரேடியோ என்னும் இசைமகுடத்தோடு தனி ராஜாங்கம் செய்யும் கெப்பிட்டலுக்கு இன்று ஐந்தாவது பிறந்தநாள்!

இத்தனை சிறப்புகளோடு இன்னும் பல புதிய மாற்றங்களோடு ஆறாம் ஆண்டில் ஆண்டில் கால்பதிக்கும் கெப்பிட்டல் FM. இன்னும் முடிவில்லாத வயதுகளை எட்டிப்பிடிக்கப்போகிறது என்பது உண்மை.

இதற்காக எங்களோடு கைகோர்த்து தங்களுடைய பேராதரவுகளை வழங்கிவரும் ரசிகர் பட்டாளத்துக்கும் விளம்பரதாரர்களுக்கும் உத்வேகத்தோடும் ஆர்வத்தோடும் கெப்பிட்டலின் முன்னேற்றத்திற்காக பணிபுரியும் அனைவருக்கும் நன்றி கூறுகிறது கெப்பிட்டல் வானொலி.

**-யதுஷா ரவித்தியாகராஜா**





**Post of Vice-Chancellor**

Institution: University of Sri Jayewardenepura
Closing Date: 22nd Dec, 2022
Apply: Registrar, University of Sri Jayewardenepura, Gangodawila, Nugegoda.

**Technical Officer/Quality Surveyor**

Company: Ananda Constructions Pvt, Ltd.
Apply: anandaconcv@gmail.com

**Commercial Manager/Procurement Manager**

Company: Elastomeric Engineering Co. Ltd.
Age Limit: 35-45 Years
Apply: Elastomeric Engineering Co.Ltd, 371, Colombo Road, Bokundara, Piliyandala. Info.lk@stellana.com

**Onboarding and Training Manager**

A well reputed company in the construction sector.

Key Requirements.

• To recruit, onboard, train and enhance competencies of workforce
• Plan, schedule and implement training programs and prepare budgets
• Maintain detailed database of the trained workforce
• Liaise with suppliers for technical assistance for training programs and certification with regular updates
• Implement training KPI's for different trades

Candidate profile

• 10 -15 years in the construction industry
• Proven track record of mentoring, training and leading workers and professionals
• Good contact base of workforce in different trades
• Ability to form and lead teams in execution
• Good communication skills in English and Sinhala/Tamil
• Sense of owner ship, good time management skills and excellent leadership and leadership skills.
• Good knowledge in advanced Excel.

**Cluster Manager**

A well reputed company in the construction sector.

Key Responsibilities

• Planning everything for execution to delivery
• Delegating work effectively
• Completing task in the delegated budget
• Manning manpower, material and time recourses effectively
• Monitoring programs and track road blocks
• Recruit and supervise site engineers
• Implement KPIs
• Make site visits in case of escalations and resolve any issues at hand

Candidate Profile

• 10 -15 years in the construction industry
• Proven track record of mentoring, training and leading workers and professionals
• Good contact base of workforce in different trades
• Ability to form and lead teams in execution
• Good communication skills in English and Sinhala/ Tamil
• Basic computer knowledge is required

**Sales Manager**

A well reputed company in the construction sector.

Key Responsibilities

• Meeting the sales target of the organization
• Selling product and services to customers
• Performing cost-benefit analysis of potential and existing customers
• Map potential customers and generate leads and opportunities for the organization
• Set KPIs for the sales team
• Analyze territory and market potential, track sales and status report
• Supply management and with reports on customer needs, problems and interest
• Expedite resolutions for customer problems and maintain client centricity

Candidate Profile

• 10- 15 years' experience in sales and management role in building materials
• Proven track record of meeting sales targets and leading teams
• Good contact base with people in the construction industry
• Excellent interpersonal skills and communication skills in English and Sinhala/ Tamil
• Excellent coordination ability and decision-making skills

An attractive remuneration package awaits the ideal candidate. Interested candidates can apply by sending their CVs to recruitmentbconnected@gmail.com

Contact us on +94 776 371 134 | +94 777328 123.
BConnected (Pvt) Ltd.
No: 07, Skelton Gardens,
Colombo 05.

# உலக செய்திகள்



# பேராபத்தில் மனிதகுலம்

## 48,400 ஆண்டுகளுக்குப் பின்னர் புத்துயிர்பெற்ற 'ஸோம்பி வைரஸ்'

சைபீரியாவில் உறைந்திருந்த ஏரியின் பனிப்பாறைகளுக்கு கீழே இருந்த 48 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான 'ஸோம்பி வைரஸ்'ஐ (Zombie virus) ஐரோப்பாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பருவநிலை மாற்றம் காரணமாக பல ஆயிரம் ஆண்டுகளாக உறைந்திருந்த இந்த ஏரி உருகியுள்ள நிலையில், இதில் 13 புதிய வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இருவேறு இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்ததில், வைரஸ்கள் இன்னும் கூட மனிதர்களைத் தாக்கும் குணத்தைக் கொண்டிருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

'ஜாம்பி வைரஸ்' மூலம் மேலும் ஒரு தொற்றுநோய் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளனர் ஆய்வாளர்கள். "பழங்கால அறியப்படாத வைரஸின் புத்துயிரால் தாவரங்கள், விலங்குகள் அல்லது மனித நோய்களின் விடயத்தில் நிலைமை மிகவும் பேரழிவு தரும்" என்று 'வைரஸ்' ஆய்வு கூறுகிறது.

ஆய்வு அறிக்கையின்படி, புவி வெப்பமடைதல், பருவநிலை மாற்றும் காரணமாக பல ஆயிரம் ஆண்டுகளாக நிரந்தரமாக உறைந்திருந்த இந்த ஏரி உருகியுள்ள நிலையில், இதில் புதிய வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தால் பனிக்கட்டிகள் வேகமாக உருகும் விதம், இதுபோன்ற சூழ்நிலையில் திடீரென வைரஸ் தொற்று பரவினால் ஆபத்து அதிகம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸ் பரவி மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கியது. இப்போதுதான் கொரோனாவுக்குப் பின், இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது. இந்நிலையில், உலகில் இருக்கும் பல்வேறு வைரஸ்கள் குறித்த ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே பல ஆண்டுகளாக ஏரியின் கீழ் உறைந்த கிடந்த புதிய வைரஸ்களை கண்டறிந்துள்ளனர். இதையடுத்து, ரஷ்யாவில் சைபீரியா பகுதியிலுள்ள இருவேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். அதில் ஆய்வாளர்கள் 'ஜாம்பி வைரஸ்'ஐ கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து விஞ்ஞானிகள் தெரிவிக்கையில்,

'ஜாம்பி வைரஸ்' சுமார் 48,500 ஆண்டுகளாகப் புதைந்து மற்றும் பல ஆயிரம் ஆண்டுகளாக உறைநிலையில் இருந்தபோதிலும் அது இன்னும் கூட மனிதர்களைத் தாக்கும் குணத்தைக் கொண்டிருக்கிறது.

இதுபோன்ற வைரஸ்கள் தாக்கினால், அது பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகம். அதேநேரம் விலங்குகள் அல்லது மனிதர்களைத் தாக்கும் ஏதாவது வைரஸ் இதேபோல் பனிப்பாறை உருகுவதால் மீண்டும் புத்துயிர் பெற்றால் அது பெரிய பாதிப்பைத் தரும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## ஒரு ட்விட் பதிவுக்கு இனி 1000 எழுத்துகள்

ட்விட்டரில் ஒரு ட்விட் பதிவுசெய்ய 280 எழுத்துகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்சவரம்பு விரைவில் ஆயிரம் எழுத்து'களாக உயர்த்தப்படலாம் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் தொடங்கிய புதிதில், ஒரு ட்விட்டுக்கு 140 எழுத்துகள் மட்டுமே அனுமதிக்கப்பட்ட நிலையில், 5 ஆண்டுகளுக்கு முன் அது 280 எழுத்துகளாக உயர்த்தப்பட்டது. தற்போது ஆயிரம் எழுத்துகளாக உயர்த்தப்படவுள்ளது.



## நேட்டோவின் உறுப்பு நாடாகிறது உக்ரைன்

தங்களது அமைப்பில் உக்ரைனை இணைத்துக் கொள்வதில் உறுதியுடன் இருப்பதாக நேட்டோ அமைப்பு செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

ருமேனியாவில் நடைபெற்ற அமெரிக்கா மற்றும் பிற நேட்டோ உறுப்புநாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது. மேலும், போரில் உக்ரைனுக்கு அளித்துவரும் உதவிகளைத் தொடரவும் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டது. தங்களது அண்டைநாடான உக்ரைன், அமெரிக்கா அங்கம் வகிக்கும் நேட்டோவில் இணைந்தால், அது தங்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனத் தெரிவித்து ரஷ்யா கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது போர் தொடுத்து. இந்தப் போர் 9 மாதங்களாக தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

போரால் உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட பிரதான நகரங்கள் பல உருக்குலைந்துள்ளதுடன், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு 15.5 மில்லியன்கணக்கான உக்ரைனியர்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில், நேட்டோ அமைப்பு இவ்வாறு உறுதிமொழியளித்துள்ளது.

## ஒட்டகக் காய்ச்சல் பரவும் அபாயம்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கட்டாரில் ஒட்டக காய்ச்சல் பரவும் அபாயமுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் கட்டாரில் நடைபெற்று வருகின்றன. சுமார் 12 இலட்சத்திற்கும் அதிகமான ரசிகர்கள் கட்டாரில் குவிந்துள்ளதால், சுகாதார தொற்றுகள் பரவ வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்:

கட்டாரில் ஒட்டகக் காய்ச்சல் பரவ வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த தொற்று பரவினால், மூன்றில் ஒரு பங்கு மக்களை பாதிக்கும். 'மிடில் ஈஸ்ட் ரெஸ்பிரேட்டரி சிஸ்டம்' அல்லது 'மெர்ஸ்' என்றும் அழைக்கப்படும் இந்த ஒட்டக காய்ச்சல் குறித்து, 'நியூ மைக்ரோப்ஸ் எண்ட் நியூ இன்ஃபெக்ஷன்ஸ்' என்ற மருத்துவ இதழில் வெளியிடப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா, குரங்கு காய்ச்சல் உள்ளிட்ட எட்டு விதமான தொற்று அபாயங்களில் ஒன்றாக ஒட்டகக் காய்ச்சலும் உள்ளது. இந்த காய்ச்சல் சுவாசக் கோளாறு மூலம் பரவ வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. பொதுவாக ஒட்டகக் காய்ச்சல் தொற்றுப் பரவல் நோயானது, சவூதி, ஜோர்தான் மற்றும் யேமன் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் அவ்வப்போது பரவும் வைரஸ் தொற்றாகும். தற்போது அதிகளவில் மக்கள் கட்டாரில் கூடியுள்ளதால், ஒட்டக காய்ச்சல் பரவ வாய்ப்புள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

## வெடித்துச் சிதறிய மவுனா லோவா எரிமலை

## 2 இலட்சம் ஹவாய் தீவு வாசிகளுக்கு எச்சரிக்கை



அமெரிக்காவிலுள்ள உலகின் மிகப்பெரிய எரிமலையான மவுனா லோவா எரிமலை 38 ஆண்டுகளுக்குப் பின்னர் வெடித்து சிதறியுள்ளதுடன், நெருப்புக் குழம்புகளை வெளியேற்றி வருகிறது.

அமெரிக்காவின் மேற்கே பசுபிக் பெருங்கடலையொட்டிய ஹவாய் தீவில் மவுனா லோவா எரிமலை அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 4,169 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள அந்த எரிமலை 5,179 சதுர கி.மீ. பரப்பளவைக்கொண்டது.

பெரியளவிலான நிலநடுக்கங்களை தொடர்ந்து ஞாயிறுக்கிழமை இரவு எரிமலை சீற்றத்துடன் நெருப்பு குழம்புகளை உமிழ்ந்து வருகிறது.

எரிமலையிலிருந்து வரும் நெருப்பு குழம்பும், சாம்பலும் இப்போது அந்த மலையின் உச்சிப்பகுதியை சூழ்ந்த அளவிலேயே இருந்து வருவதாக அமெரிக்காவின் புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

எரிமலை குழம்பு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி செல்லத் தொடங்கினால் அங்கிருந்து வெளியேறத் தயாராக இருக்குமாறு ஹவாய் தீவில் வசிக்கும் சுமார் 2 இலட்சம் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1843ஆம் ஆண்டிலிருந்து இப்போதுவரை 33 முறை சீற்றம் கண்ட மவுனா லோவா கடைசியாக கடந்த 1984ஆம் ஆண்டில் வெடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓட்டமாவடி பிரதேச சபை வரவு-செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றம்



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் 56ஆவது சபை அமர்வும் 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவும் நேற்று முன்தினம் (29) சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் இடம்பெற்ற இவ்வரவு-செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

18 உறுப்பினர்களைக்கொண்ட சபையில் 15 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியதாகவும், அதில் ஓர் உறுப்பினர் சபைக்கு சமுகமளிக்காதபோதும் எழுத்து மூலமும், தொலைபேசி ஊடாகவும் ஆதரவு வழங்கியதாகவும் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

அத்துடன், இரண்டு உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிர்த்து வாக்களித்துள்ளதுடன், மற்றுமொரு உறுப்பினர் அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## திருமலை மாவட்ட வைத்தியசாலைகள் விரைவில் தரமுயர்த்தப்பட வேண்டும்

### இம்ரான் மஹ்ரூப் எம்.பி. வேண்டுகோள்

(கிண்ணியா, திருகோணமலை நிருபர்கள்)

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு பொது வைத்தியசாலையும் A தரத்திலான நான்கு தள வைத்தியசாலையும் ஏனைய வைத்தியசாலைகளும் காணப்படுகின்றன. கிண்ணியா, மூதூர், புல்மோட்டை வைத்தியசாலைகள் கடந்த காலங்களில் தரமுயர்த்தப்பட்டாலும் தேவையான போதுமான வசதிகள் தற்போது குறைவாகவே காணப்படுகின்றன. பொறுப்பான அமைச்சர் அதற்கான வசதிகளைப் பெற்றுத்தருவதை உறுதிப்படுத்தவேண்டும் என சுகாதார அமைச்சு சம்பந்தமான குழுநிலை விவாதத்தில் நாடாளுமன்றில் உரையாற்றும்போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கிண்ணியா வைத்தியசாலை தற்போது இடப் பற்றாக்குறையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது, அங்கு X-Ray இயந்திரம் கிடைக்கப்பெற்றபோதிலும் X-Ray பிரிவை ஆரம்பிக்கமுடியாத நிலை காணப்படுகிறது. இதனால் அங்கு வருகின்ற நோயாளிகள் பல கிலோமீற்றர் சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதனால் அரசாங்கம் அவசரமாக X-Ray பிரிவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவகம் அதிகூடிய மக்களையும் பிரதேசத்தையும் கொண்டு காணப்படுகின்றமையால் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை தோப்பூர் பிரதேசத்தை மையமாகக்கொண்டு புதிய அலுவலகம் அமைக்கவேண்டும் என்பதுடன் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தற்காலிக கட்டடத்தில் காணப்படுவதால் அதற்கான நிரந்தர கட்டடத்தையும் அதற்கான வாகன வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் கூறுகையில், திருமலை மாவட்டத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறார்கள். தற்போது சிறுவயதினர் உட்பட புற்றுநோயாளர்கள் மரணம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற தொலைத்தொடர்பு கோபுரங்களா? என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். திருமலை மாவட்டத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதற்கான காரணம் என்னவென்பதை கண்டறிய விசேட குழுவொன்றை அமைக்குமாறு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

## ஹெரோயினுடன் இருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இராகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் பகிதரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசங்களுக்கு சென்று நபர்களை கைதுசெய்துள்ளதுடன், அக்கரைப்பற்றில் கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 1000 மில்லிகிராம் ஹெரோயினும், மற்றைய நபரிடமிருந்து 20 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (29) ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபை வீதியோர மீன் விற்பனைக்கு அனுமதி மறுப்பு

### மீன் வியாபாரிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்குட்பட்ட வீதியோரங்களில் இதுவரைகாலமும் மீன் வியாபாரிகள் மீன் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) வீதியோரத்தில் மீன் விற்பனை செய்வதை நிறுத்துமாறு பொது அறிவித்தல் ஒன்றை ஒலிபெருக்கி மூலம் விடுத்துள்ளது.

இந்நிலையில், பிரதேச சபைக்குபட்பட்ட பொதுச் சந்தைகளில் காலைமுதல் நண்பகல் வேளைவரையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுவிட்டு, மாலை 2 மணிக்குப் பிற்பாடுதான் தாம் இதுவரையில் வீதியோரங்களில் மீன் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும், பிரதேச சபையின் இந்நடவடிக்கை தமது வாழ்வாதாரத்திற்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், தெரிவித்து நேற்று முன்தினம் (29) அப்பகுதியிலுள்ள மீன் வியாபாரிகள், மீன் பெட்டிகளுடன் களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையின் முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுச் சந்தைகளில் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் மாலை 2 மணிக்குப் பின்னர் வீதியோரங்களில் மீன் வியாபாரத்தில் ஈடுபடலாம் என்ற சபைத் தீர்மானத்தை தாம் ஏற்கனவே எடுத்துள்ளதாகவும், பிரதேச சபை அதிகாரிகளின் இந்நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் இதன்போது வருகைதந்த குறித்த பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் தெரிவித்தார்.

எனினும், தமது மேலிடத்து அதிகாரிகளின் உத்தரவின்பேரில் வீதியோரங்களில் மேற்கொள்ளப்படும் மீன் வியாபாரங்களைத் தடைசெய்துள்ளதாக இதன்போது வருகை தந்த மீன் வியாபாரிகளிடம் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.அறிவழகன் தெரிவித்தார்.

நாம் 2 மணிக்குப் பின்னர் வீதியோரத்தில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்குரிய அனுமதி வழங்குவதென தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக பிரதேச சபையின் உறுப்பினர் மே.வினோராஜ் தெரிவிக்கின்றார். மாறாக, முற்றாக வீதியோர மீன் வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் தெரிவிக்கின்றார். ஒரு சபையில் இரு மாறுபட்ட கருத்துகள் உள்ளதாகவும், பொதுச் சந்தையில் மீன் வியாபாரத்தில், ஈடுபடும்போது தாம் செலுத்தும் வரிகளுக்கு இதுவரையில் பற்றுச்சீட்டு வழங்குவதில்லை, காலையில் பிடிக்கப்படும் மீன் மதியம் வரை விற்றுவிட முடியாது, அதனை மாலையிலும் விற்றால்தான் எமது வாழ்வாதாரம் பாதிக்காது, இல்லையேல் மறுநாள் மீனை வைத்திருந்தால் அவை அழுகிவிடுகின்றன, இதனால் நாம் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்யும் மீன்களை மறுநாள் கொட்டிவிட வேண்டிய நிலை ஏற்படுகின்றது எனவும் மீன் வியாபாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயவிக்கிரம மீன் வியாபாரிகளிடம் கலந்துரையாடினார். மீன் வியாபாரிகள் அனைவரையும் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவித்தார். எனினும், தாம் பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு எந்த நடவடிக்கை வந்தாலும் தாம் எதிர்கொள்ளத் தயார் என கூறிவிட்டு மீன் வியாபாரிகள் மீண்டும் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்து அதிலிருந்து மீன் வியாபாரிகள் கலைந்துசென்றனர்.

பின்னர் குறித்த மீன் வியாபாரிகள் நேற்று முன்தினம் (29) மாலை வரையும் வீதியோரங்களில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வதைத் தடுக்க மட்டு., திருமலையில் கலந்துரையாடல்





(கிண்ணியா, மட்டக்களப்பு நிருபர்கள்)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு கடல்வழிப் பயணம் மூலமாக செல்வதைத் தடைசெய்யவும் மக்கள் அதனை நம்பாது செயற்படுவது தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் கலந்துரையாடலொன்று திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கான உயர்ஸ்தானிகராலய உயர் பொலிஸ் அதிகாரி ரொபட் வில்சன் மற்றும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு இடையில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில் அவுஸ்திரேலியாவுக்கு கப்பல் மூலம் செல்வதனால் எந்தப் பலனும் இல்லை. அரசாங்கம் மூலமாக திருப்பியனுப்பப்படுவர். மக்கள் வதந்திகளை நம்பாதீர்கள். இலட்சக் கணக்கான பணத்தைக் கொடுத்து ஏமாறாமல் சட்டவிரோதமான முறையில் செல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இதனை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்வது தொடர்பாகவும் உயர்ஸ்தானிகராலய உயர் பொலிஸ் அதிகாரி தலைமையிலான குழுவினர் இதன்போது பொலிஸ் உயரதிகாரி களிடத்தில் தெரிவித்துக்கொண்டார்.

குறித்த சந்திப்பில் அவுஸ்திரேலியாவின் பொலிஸ் உயரதிகாரி, ஊடக அதிகாரி உட்பட திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எனப் பலர் கலந்துகொண்டனர்

# பாடசாலை மாணவர்களை இரு சந்தர்ப்பங்களில் கடத்த முயற்சித்த சந்தேக நபர் விளக்கமறியலில்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவர்களைக் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலை மாணவர்களான 11 வயது மதிக்கத்தக்க இருவரை இருவேறு சந்தர்ப்பங்களில் முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கடத்த முயற்சிப்பதாக பொலிஸ் நிலையத்தில் இம்மாதம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனையடுத்து சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த அதிரடி நடவடிக்கையில் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அத்துடன், குறித்த கடத்தல் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளிலுள்ள சிசிரிவி கெமராக்களின் உதவிகள் மற்றும் புலன் விசாரணை முடக்கிவிடப்பட்ட நிலையில், மாணவர்களை கடத்த முயற்சித்த சந்தேக நபர்




கைதாகியுள்ளார்.


இவ்வாறு கைதான சந்தேக நபர் கல்முனை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவராவார். இச்சம்பவமானது தலைக்கவசம் மற்றும் முகக்கவசம் ஆகியவற்றுடன் முகங்களை மூடியவாறு மோட்டார்சைக்கிளில் வந்த சந்தேக நபர்கள், மாணவர்கள் சிலரை இலக்குவைத்து இவ்வாறான கடத்தல் முயற்சியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டு, கடந்த வாரம் பல முறைப்பாடுகள் பதிவுசெய்யட்டிருந்ததுடன், சாய்ந்தமருது பொலிஸாரும் விசாரணையை முடக்கிவிட்டிருந்தனர்.

இதற்கமைய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட இவ்விசாரணையின்போது பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதுடன், நேற்று முன்தினம் (29) செவ்வாய்க்கிழமை கல்முனை நீதவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டார்.

இவ்வடையாள அணிவகுப்பின்போது அச்சந்தேக நபரை பாதிக்கப்பட்ட மாணவன் அடையாளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து குறித்த சந்தேக நபரை நாளை 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இச்சம்பவம் தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளனர்.

# வயற் பாடசாலை திட்டத்தின் கீழ் சேதன வீட்டுத்தோட்ட அறுவடை





(மூதூர் நிருபர்)

அரசாங்கத்தின் வயற் பாடசாலை திட்டத்தின் கீழ் செய்கைபண்ணப்பட்ட சேதன வீட்டுத் தோட்ட அறுவடை விழாவும், வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (29) மூதூர், இத்திக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது சேதனப் பசளை மூலம் செய்கை பண்ணப்பட்ட பயறு, கொச்சி, வெண்டி, பீர்க்கை போன்ற வீட்டுத்தோட்டக் காய்கறிகள் அறுவடை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.குஸைன் கலந்து சிறப்பித்தார்.

ஏனைய அதிதிகளாக உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.இம்தியாஸ் அஹமட், பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.சிவசங்கர், விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மோட்டார்சைக்கிள் விபத்தில் தாதியொருவர் பலி!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - புல்மோட்டை பிரதான வீதி கும்புறுபிட்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வைத்தியசாலையின் தாதியரொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது.

குறித்த விபத்து நேற்று (30) காலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளும் பவுசரும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.


சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, மோட்டார்சைக்கிளில் தாதியர் உத்தியோகத்தரும், ஆசிரியையும் கடமைக்காக சென்று கொண்டிருந்தபோது இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

நிலாவெளி பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குச்சவெளி வைத்திய சாலையில் கடமையாற்றிவரும் தாதியர் உத்தியோகத்தரான எஸ்.கீதாஞ்சனா தேவி (44 வயது) சம்பவ இடத்தில் உயிரிழந் துள்ளதாகவும், அவருடன் பயணித்த அவரது அக்கா ஆசிரியை படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

குறித்த ஆசிரியை குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பட்டுவேட்டி கனவோட இருந்து கோவணமும் இல்லாமல் போகுமாம் எண்டு புள்ளையான் எம்.பி. பேசியிருக்காரு எலுவா..?

அடே பொடியா புலியோட இருந்து நீயும் கருணாவும் தமிழரிட கோவணத்த உருவினவங்க நீங்கதானே.. இப்ப மஹிந்த மாமாட சிவப்பு சால்வைதாண்டா உனக்கு கோவணமா இருக்கு. நல்லா குனிஞ்சு பாத்து கதடாம்பி.!

# மட்டு. திக்கோடை கிராமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

## குடியிருப்பொன்று முற்றாக சேதம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திக்கோடை கிராமத்தில் நேற்று முன்தினம் (29) அதிகாலை 3 மணியளவில் புகுந்த 3 காட்டு யானைகளால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டதாக தெரிவிக்கின்றனர். இந்நிலையில், அங்கு புகுந்த காட்டு யானைகள் அங்கிருந்த வீடொன்றையும் முற்றாக உடைத்து தாக்கி விட்டுச்சென்றுள்ளன.

அக்குறித்த வீட்டை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் காட்டு யானைகள் உடைத்து சேதப்படுத்தியிருந்த நிலையில், அதனை வெளிநாட்டிலுள்ள தனவந்தர்கள் சிலர் இணைந்து புனரமைத்துக் கொடுத்திருந்தனர். இந்நிலையில், மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைபோன்று செவ்வாய்க்கிழமையும் அதே வீட்டை மீண்டும் இவ்வாறு காட்டு யானைகள் துவம்சம் செய்திருப்பதானது மிகுந்த வேதனையளிப்பதாக அவ்வீட்டில் தனிமையில் வசித்துவரும் பெண் தெரிவிக்கின்றார்.

கணவனைப் பிரிந்த நிலையில் ஒரே மகளை விடுதி ஒன்றில் படிப்பதற்காக விட்டுவிட்டு, குறித்த வீட்டில் தனிமையில் வாழ்ந்துவரும் குறித்த பெண் அயல் வீட்டிற்கு நித்திரைக்குச் சென்றுள்ளார். இந்நிலையில், யானைகள் வீட்டை முற்றாக உடைத்து சேதப்படுத்தியுள்ளன. எனவே, கருணையுள்ளம் கொண்ட யாராவது தனது வீட்டை புனருத்தாரணம் செய்து தருமாறும், அப்பகுதியில் யானை பாதுகாப்பு வேலியையும் அமைக்குமாறும் அப்பெண் தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மிக நீண்டகாலமாக காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்த வண்ணமுள்ளதாகவும், யானை பாதுகாப்பு வேலி அமைக்குமாறு கோரியும் இதனை யாரும் செவிசாய்க்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கல்முனை மஹ்மூத் பாலிகா வித்தியாலய மாணவர்கள் 17 பேர் அதி திறமைச் சித்தி

(நற்பிட்டிமுனை நிருபர்)

பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப் பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் பிரகாரம் கல்முனை மஹ்மூத் பாலிகாவைச் சேர்ந்த 17 மாணவர்கள் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

8ஏ, 1பீ சித்தியை 16 பேரும், 8ஏ, 1சீ சித்தியை 4 பேரும், 7ஏ, 2பீ சித்தியை 6 பேரும், 7ஏ, 1பீ, 1 சீ சித்தியை 6 பேரும், 7ஏ, 2சீ ஒருவரும், 6ஏ 23 பேரும், 5ஏ 21 பேரும், 4ஏ 12 பேரும் பெற்றுள்ளனர்.

கடந்த காலங்களில். கல்முனை வலயத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர உயர்தரப் பரீட்சைகளில் மஹ்மூத் பாலிகா சிறந்த சாதனையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# மட்டு. மாநகர சபைக்கு யாழ். மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட குழு விஜயம்!




(கல்லடி நிருபர்)


யாழ்ப்பாணம், மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் அவரது பிரதேச சபை உறுப்பினர்கள் சகிதம் அண்மையில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

இதன்போது அவர்கள் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றல் நிலையத்தைப் பார்வையிட்டதோடு, மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியதாகவும் முதல்வர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாநகர சபை ஆணையாளர் கே.மதிவண்ணன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென்எருவில்பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலிலும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதிசத்தியகௌரி தரணிதரனின் நெறிப்படுத்தலிலும் நேற்று முன்தினம் (29) 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நடைபெற்றது.

சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமாரின் தலைமையில் நடைபெற்ற இவ்வேலைத்திட்டத்தில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி சோ.தமிழ்வாணி, மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஆனந்தமோகன், எருவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பா.துரைராசசிங்கம், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிந்திரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலயங்கள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள், மயானங்கள் ஆகியன இதன்போது சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு, பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் அகற்றப்பட்டதுடன், டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்பட்ட இடங்களும் முற்றுமுழுதாக சுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டைக்கல்லாறு வித்தியாலயத்தில் 96 வீதமான மாணவர்கள் சித்தி



(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு களைப் பெற்று பாடசாலைக்கும், கிராமத்திற்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ள மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான பி.புவனேஸ்வரி, ஆர்.சண்முகநாதன் உட்பட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இம்முறை வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 96.6 வீதமான மாணவர்கள் சித்திபெற்று உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர். கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயமானது அதிபர் க.செல்வராசா வழிகாட்டலில் கற்றல், கற்பித்தல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்பாக இயங்கிவருகின்றது.

இப்பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறுகளின்படி கோ.சலுஜின் 9ஏ, சு.அபிஷேகா 9ஏ, ப.கிஷோபிரகித் 8ஏ,பி, ரூ.அனோசித் 8ஏ,பி, உ.ஷதுனா 8ஏ,பி, ஜி.வேணுஷஜித் 8ஏ,சீ, ர.விஸ்வா 8ஏ,சீ, உ.சிவஷாகரன் 7ஏ,பி,சீ, ம.கோபிஷனன் 6ஏ,3பி, பி.ஜர்ஷனா 6ஏ,3பி, கீ.டினோஜன் 6ஏ,பி,2சீ, வி.யுதேஷாந் 6ஏ,பி,2சீ, நே.டினோஜன் 5ஏ,3பி,சீ, உ.கிருஷிகா 5ஏ,3பி,சீ ஆகிய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# FIFA WORLD CUP - 2022





## 'Round of 16' சுற்றில் நெதர்லாந்து - அமெரிக்கா, இங்கிலாந்து - செனகல் மோதல்

## கடந்த உலகக்கிண்ணத்தில் தகுதிபெறாத நெதர்லாந்து இம்முறை நொக் அவுட் சுற்றுக்குத் தகுதி

பல சவால்களுக்கு மத்தியில் பீபா 2022 உலகக்கிண்ணத் தொடரை பிரம்மாண்டமாக நடத்திவரும் கட்டார், இம்முறை உலகக்கிண்ணத்தில் முதல் சுற்றுடன் வெளியேறியது. அது மாத்திரமல்லாமல் பீபா உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் நாடு ஒரு வெற்றியும் இல்லாமல் முதல் சுற்றுடன் வெளியேறுவதும் இதுவே முதல் முறையாகும்.

குரூப் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள கட்டார் - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் அல்-பைத் மைதானத்தில் இடம்பெற்றது. இரு அணிகளுக்கும் இதுவே இந்த சுற்றில் கடைசி போட்டி. இதில் 2-0 என்ற கணக்கில் கட்டாரை வீழ்த்தி நெதர்லாந்து அணி 'ரவுண்ட் ஒவ் 16' சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இந்தப் போட்டியில் 26 மற்றும் 49ஆவது நிமிடத்தில் இரண்டு கோல்களை பதிவு செய்திருந்தது அந்த அணி.

செனகல் அணிக்கு எதிராக வெற்றி, ஈக்வடோர் அணி உடன் சமநிலை மற்றும் கட்டார் அணிக்கு எதிராக வெற்றி என அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது நெதர்லாந்து. 23 வயதான நெதர்லாந்து வீரர் கோடி காக்போ, மூன்று போட்டிகளிலும் தலா ஒரு கோல் பதிவு செய்துள்ளமை சிறப்பம்சமாகும். 2018ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திற்கு தகுதிபெறாத நெதர்லாந்து அணி இம்முறை நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.



## வேல்ஸ் அணியின் 64 ஆண்டு கனவை தவிடுபொடியாக்கிய இங்கிலாந்து

குழு 'பி' பிரிவு ஆட்டம் ஒன்றில் வேல்ஸ் - இங்கிலாந்து அணிகள் தங்களது இறுதி ஆட்டத்தில் மோதின. முதல் பாதியில் எந்த அணிகளும் கோல் அடிக்கவில்லை. 2ஆவது பாதி ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் மார்கஸ் ராஷ்போர்டு தமது அணிக்கான முதல் கோலை அடித்தார். தொடர்ந்து 51ஆவது நிமிடத்தில் மற்றொரு வீரர் பில் போடன் ஒரு கோல் அடித்து வெற்றி வாய்ப்பை உறுதி செய்தார்.

68ஆவது நிமிடத்தில் மார்கஸ் ராஷ்போர்ட் மீண்டும் ஒரு கோல் அடிக்க, ஆட்டநேர முடிவில் 3-0 என்ற கோல்கணக்கில் வேல்ஸ் அணியை வீழ்த்தி இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 'பி' பிரிவில் 7 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி முதலிடம் பிடித்தது. அத்துடன், அடுத்த நொக்அவுட் சுற்றான ரவுண்ட் ஒவ் 16 சுற்றுக்கும் முன்னேறியது.

கடந்த 2018 உலகக்கிண்ணத்தில் நான்காமிடத்தைப் பிடித்த இங்கிலாந்து அணி இம்முறை உலகக்கிண்ணத்தில் சம்பியன் பட்டத்தை இலக்குவைத்துள்ளது. 64 ஆண்டுகளுக்குப் பின் வேல்ஸ் அணி பீபா உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றிருந்த நிலையில், முதல் சுற்றுடன் வெளியேறியுள்ளது. இதனால் வேல்ஸ் அணியின் ரசிகர்கள் மைதானத்திலேயே தங்களது விரக்தியை வெளிப்படுத்தினர்.

## 20 ஆண்டுகளின் பின் நொக் அவுட் சுற்றுக்குத் தகுதிபெற்ற செனகல்

குழு 'ஏ'யில் இடம்பெற்றுள்ள செனகல் மற்றும் ஈக்வேடார் அணிகள் தங்களது இறுதி ஆட்டத்தில் நேற்று முன்தினம் கலீபா சர்வதேச மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின. நொக் அவுட் சுற்றுக்கு முன்னேற இரு அணிகளுக்கும் இடையில் பலத்த போட்டி நிலவியது. இந்த போட்டியில் வெற்றிபெற்றாலோ அல்லது டிரா செய்தாலோ அடுத்த சுற்றுக்கு



முன்னேறும் வாய்ப்பு ஈக்வேடார் அணிக்கு இருந்தது. ஆனால், அதனை தடுத்து தவிடுபொடியாக்கியது செனகல் அணி.

போட்டியின் முதல் கோலை செனகல் அணி 44ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பு மூலம் அடித்தது. அதற்கான பதில் கோலை 67ஆவது நிமிடத்தில் பதிவு செய்தது ஈக்வேடார். ஆனாலும் அடுத்த 3 நிமிடங்களில் இரண்டாவது கோலை பதிவு செய்து முன்னிலை பெற்றது செனகல். ஆட்டநேர முடிவில் 2-1 என வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறி உள்ளது அந்த அணி. இந்த வெற்றியின் மூலம் 'ஏ' பிரிவில் இரண்டாவது இடம்பிடித்தது செனகல்.

கடந்த 2018ஆம் ஆண்டு குழுநிலை போட்டியுடன் வெளியேறிய செனகல் அணிக்கு இந்த ஆண்டு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. 2002ஆம் ஆண்டு காலிறுதிக்கு முன்னேறியதே செனகல் அணியின் உலகக்கிண்ண உயர்ந்த பெறுபேறாகும். அதன்படி 20 ஆண்டுகளின் பின்னர் நொக்அவுட் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது செனகல்.

## ஈரானுக்கு அதிர்ச்சி கொடுத்து நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறிய அமெரிக்கா

ஈரான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற அமெரிக்கா அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. உலகக்கிண்ணத் தொடருக்கான குழுக்கள் பிரிக்கப்பட்ட உடனே ரசிகர்களிடையே அதிக பேசுபொருளானது இந்த அணிகள் தான். ஏனென்றால், அரசியல் ரீதியாக மோதிக்கொள்ளும் ஈரான் - அமெரிக்கா நேருக்கு நேர் உலகக்கிண்ணப் போட்டியில் மோத இருந்தமை அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.


இந்த இரு அணிகள் 1998ஆம் ஆண்டு பீபா போட்டியில் மோதிக்கொண்டன. அப்போது அமெரிக்காவின் அன்றைய ஜனாதிபதியாக இருந்த பில் கிளிண்டன் ஈரானுடனான சுமூக பேச்சுவார்த்தைக்கு போட்டியை பயன்படுத்த ஆலோசித்ததாக தகவல் வெளியாகியது. தற்போதும் ஈரான் - அமெரிக்கா அணிகள் மோதவிருந்த இந்தப் போட்டிக்கு இரு நாட்டு ரசிகர்களிடையே பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டது. அடுத்த சுற்றுக்கு முன்னேற இரு அணிகளும் இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டிய தேவையில் இருந்தன.

ஆட்டம் ஆரம்பித்ததிலிருந்து அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தியது. அதன் பலனாக 38ஆவது நிமிடத்தில் புலிசிக் முதல் கோல் அடித்து அசத்தினார். மீண்டும் முதல் பாதி ஆட்டத்தின் கூடுதல் நிமிடத்தில் அமெரிக்க 2ஆவது கோலை அடித்தது. ஆனால், அது ஒவ் சைடாக மாறியது. இதன் பின்னர் முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஈரான் வீரர் தரேமி கோல் அடிக்க முயற்சி செய்தார். ஆனால், அதனை அமெரிக்கா தடுப்பாட்ட வீரர்கள் தடுத்து நிறுத்தினர்.

இதனிடையே மைதானத்தில் இருந்த ஈரான் ரசிகர்கள், வீரர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் ஒலி எழுப்பத் தொடங்கினர். இதனால் ஆட்டம் இன்னும் பரபரப்பானது. பின்னர் 81ஆவது நிமிடத்தில் ஈரான் அணிக்கு ஃபிரீ கிக் வாய்ப்பு கிடைத்தது. அதில் கோல் அடிக்க எடுத்த முயற்சிகளை,



அமெரிக்க வீரர்கள் தடுத்தனர். தொடர்ந்து இரண்டாம் பாதிநேரம் முடிவுக்கு வந்த நிலையில், கூடுதலாக 9 நிமிடங்கள் வழங்கப்பட்டது. அதில் கோல் அடிக்க வேண்டும் என்ற முனைப்பில் ஈரான் வீரர்கள் தீவிரமாக முயற்சித்தனர். இறுதியாக அமெரிக்கா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று, அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. கடந்த உலகக்கிண்ணத்திற்கு தகுதிபெறாத அமெரிக்கா இம்முறை ரவுண்ட் ஒவ்16 சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது.



## ஆடவர் உலகக்கிண்ணத்தில் முதல் பெண் நடுவர் பிரான்ஸின் ஃப்ராபார்ட்

(ரமணி)

ஜேர்மனி, கோஸ்டாரிகா அணிகளுக்கிடையில் இன்று நடைபெறவுள்ள குரூப் ஈ போட்டிக்கு ஸ்டீஃபனி ஃப்ராபார்ட் நடுவராகப் பணியாற்றுவார் என பீபா அறிவித்ததையடுத்து, ஆடவர் உலகக் கிண்ணப் போட்டியின் நடுவராகிய முதல் பெண்மணி என்ற பெருமையை ஸ்டீபனி ஃப்ராபார்ட் பெறுகிறார்.

ருவாண்டா அதிகாரி சலிமா முகன்சங்கா, ஜப்பானின் யோஷிமி யமாஷிதா ஆகியோருடன், கட்டாரில் நடைபெறும் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 பேரில், பிரான்ஸின் ஃப்ராபார்ட் மூன்று பெண் நடுவர்களில் ஒருவர். மூன்று பெண் அதிகாரிகள் உதவி நடுவர்களாகப் பணியாற்றுகின்றனர்.

38 வயதான ஃப்ராபார்ட் 2019ஆம் ஆண்டில் பிரான்ஸின் லீக் 1இல் நடுவராக இருந்த முதல் பெண்மணி ஆவார், அதே ஆண்டில் அவர் தனது சொந்த நாட்டில் மகளிர் உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் கடமையாற்றினார். 2020இல் சம்பியன்ஸ் லீக் மற்றும் கடந்த சீசனில் பிரெஞ்சு கிண்ண இறுதிப் போட்டிக்கு நடுவராக இருப்பதற்கு முன்பு, லிவர்பூல் மற்றும் செல்சியா இடையேயான 2019 UEFA சுப்பர் கிண்ண இறுதிப் போட்டியிலும் ஃப்ராபார்ட் நடுவராக இருந்தார்.

## ஒருநாள் தொடர் நியூசிலாந்து வசம்

சுற்றுலா இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3ஆவது ஒருநாள் ஆட்டம் மழையால் முழுமையாக நடைபெறாத காரணத்தால் ஒருநாள் தொடரை 1-0 என வென்றது நியூசிலாந்து அணி.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 3 ரி20 ஆட்டங்களில் விளையாடியுள்ளது இந்திய அணி. ரி20 தொடரில் முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. 2ஆவது ரி20யை இந்தியா வென்றது. 3ஆவது ரி20 ஆட்டம் டை ஆன காரணத்தால் ரி20 தொடரை 1-0 என இந்திய அணி வென்றது. ஒருநாள் தொடரில் முதல் ஒருநாள் ஆட்டத்தில் நியூசிலாந்து வென்றது. 2ஆவது ஒருநாள்ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

3ஆவது ஒருநாள் ஆட்டம் கிறைஸ்ட்சர்ச்சில் நேற்று நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் ஃபீல்டிங்கைத் தெவுசெய்தார். நியூசிலாந்துஅணியில் பிரேஸ்வெல்லுக்குப் பதிலாக மில்ன் தெரிவானார். இந்திய அணியில் மாற்றமில்லை.

அதன்படி முதலில் ஆடிய இந்திய அணி 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 219 ஓட்டங்கள் எடுத்தது. 64 பந்துகளை எதிர்கொண்டு 1 சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்கள் எடுத்து இந்திய அணியின் தூணாக இருந்தார் வாஷிங்டன் சுந்தர். ஆடம் மில்ன், டேரில் மிட்செல்தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து அணி முதல் 10 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 59 ஓட்டங்கள் எடுத்தது. ஃபின் ஆலன் 50 பந்துகளில் அரை சதத்தை எட்டினார். இதன்பிறகு 57 ஓட்டங்களில் உம்ரான் மாலிக் பந்தில் ஆட்டமிழந்தார். 18 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு நியூசிலாந்து அணி104 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை பெய்ய ஆரம்பித்தது. டிஎல்எஸ் முறைப்படி முடிவை அறிவிக்கவேண்டுமென்றால் 20 ஓவர்கள் வீசி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். நியூசிலாந்து அணி அப்போது கூடுதலாக 6 ஓட்டங்கள் எடுத்திருந்தபோதும் மீதமுள்ள இரு ஓவர்களை வீச முடியாமல் மழை தொடர்ந்து பெய்தது. அதன்படி 3ஆவது ஒருநாள் ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து வெற்றி பெறும் நிலையில் இருந்த நியூசிலாந்து அணியால் 2 ஓவர்களுக்குத் தொடர்ந்து விளையாட முடியாத காரணத்தால் வெற்றியை ருசிக்க முடியாமல் போனது. எனினும், நியூசிலாந்து அணி ஒருநாள் தொடரை 1-0 என வென்றது. தொடர் நாயகனாக டாம் லதம் தெரிவானார்.

### இன்றைய போட்டிகள்

குரேஷியா VS பெல்ஜியம் (குழு F) இரவு 8.30

கனடா VS மொரோக்கோ (குழு F) இரவு 8.30

ஜப்பான் VS ஸ்பெயின் (குழு E) நள்ளிரவு 12.30

ஜேர்மனி VS கோஸ்டாரிகா (குழு E) நள்ளிரவு 12.30

FIFA WORLD CUP Qatar2022

## கடினபந்து கிரிக்கெட் போட்டியில் கல்முனை ஜிம்கானா விளையாட்டுக் விளையாட்டுக் கழகம் அபார வெற்றி

(எஸ். அஷ்ரப்கான்)

கல்முனை 'யங் பேட்ஸ்' விளையாட்டுக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகத்தின் ஆறாவது சீருடை அறிமுக நிகழ்வும் கடினபந்து கிரிக்கெட் போட்டியும் அண்மையில் கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய மைதானத்தில் 'யங் பேட்ஸ்' விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் எம்.வை.பாயிஸின் ஏற்பாட்டில், தலைவர் எம்.எம்.மர்சூக் தலைமையில் இடம்பெற்றது.

'யங் பேட்ஸ்' கழகத்தின் ஆலோசகர் எம்.எச்.இக்றாம், போட்டிக்கான அனுசரணை ஸம்ஸம் றியல் எஸ்டேட் உரிமையாளர் டொக்டர் ஏ.எல்.எம்.றஹ்மான் ஆகியோரின் அனுசரணையில் நடைபெற்ற இச்சிநேகபூர்வ கடினபந்து 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் கல்முனை 'யங் பேட்ஸ்' விளையாட்டுக் கழகத்தினரை எதிர்த்து கல்முனை ஜிம்கானா விளையாட்டுக் கழகத்தினர் மோதினர்.

போட்டியில் கல்முனை ஜிம்கானா விளையாட்டுக் கழக அணியினர் இறுதிப்பந்தில் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டனர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக கல்முனை ஜிம்கானா விளையாட்டுக் கழகத்தின் வெற்றி ஓட்டத்தை பெற்றுக்கொடுத்த என்.ஜே.எம்.ஜெஸான் தெரிவானார். இவருக்கு பணப் பரிசு மற்றும் கிண்ணமும் வழங்கி அதிதிகளால் கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கே.எம்.அப்துர் ரஸாக் (ஜவாத்) கலந்துகொண்டு கழகத்தின் சீருடை அறிமுகம் மற்றும் வெற்றிக் கிண்ணத்தை வழங்கி கௌரவித்தார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7